விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 24 செவ்வாய்க்கிழமை (07.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109

## தமிழர்களின் எதிர்பார்ப்புகள்

# ஆட்சி மாற்றத்தினால் எதுவும் ஆகவில்லை

### அவுஸ்.தூதுவரிடம் முதலமைச்சர் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தினால் தமிழ் மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு எவ்வித மாற்றமும் நடைமுறையில் நிகழவில்லை என யாழ்.வந்த அவுஸ்திரேலிய தூதுவரிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

### மகிந்தவோ பொன்சேகாவோ பிரபாகரனை அழிக்கவில்லை!

## சுனாமியாலேயே அவர் இறந்தார்; போராட்டத்தில் நபர் ஒருவர் குதிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம இடம்பெற்ற சுனாமி பேரழிவிலேயே மரணித்து விட்டதாக கூறிக் கொள்ளும் நபர் ஒருவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க அனுமதி பெற்றுத்தரக் கோரி போராட்டம் 24ஆம் பக்கம் பார்க்க....

## மக்களை ரணில் ஏமாற்ற முடியாது

(கொழும்பு)

பிரதமர் ரணில் விககிரமசிங்க எதர் வரும் வெள்ளிக்கிழமை புதிய அரசியலமைப்பு சீர்திருத்தங்களை முன்வைக்கவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஏமாற்ற முடிந்தாலும் மக்களை ஏமாற்ற முடியாது என மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க 24ஆம் பக்கம் பார்க்க....

## பாக்.-இலங்கை 6 உடன்படிக்கைகள்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கும் இலங்கைககும் இடையில் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இரு நாடுகளுக்கும் இடையில் 6 உடன்படிக்கைகள் நேற்று கைச்சாத்திடப்பட்டன.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் நேற்று முற்பகல் இடம்பெற்ற இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த 24ஆம் பக்கம் பார்க்க....

# தேசிய ஒற்றுமையின் சின்னம் தேசியக்கொடியா? 19வது திருத்தமா?

### ஜனாதிபதியின் கருத்திற்கு பிரதம நீதியரசர் கேள்வி

(கொழும்பு)

19-வது அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் நேற்று உயர்நீதிமன்றத்தில் இறுதியாக்கல் விசாரணைகள் இடம்பெற்றன.

இதன்போது இலங்கையின் சட்டமா அதிபர் குறித்த 19-வது திருத்தம் தொடர்பில் தமது கருத்தை முன்வைத்தார்.

குறித்த திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பின்றி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெருமபான்மையுடன் நிறைவேற்றப்பட முடியும் என்று பரிந்துரையை அவர் முன்வைத்தார்.

இதன்போது குறுக்கிட்ட விசாரணைக்குழுவின் தலைவரும் பரதம நீதியரசருமான கே.ஸ்ரீபவன், 19-வது திருத்தம் இலங்கையின் தேசிய ஒற்றுமையின் சின்னமாக திகழ்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இலங்கையின் தேசியக்கொடியே தேசிய ஒற்றுமையின் சின்னமாக தற்போது விளங்குகிறது.

ஆகவே 19-வது சரத்து தேசிய ஒற்றுமையின் சின்னம் என்று ஜனாதிபதி கூறியிருக்கும் முரண்பாட்டு கருத்து தொடர்பில் சட்டமா அதிபர் கவனம் செலுத்தவேண்டும் என்று பிரதம நீதியரசர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, எதிர்வரும் 9-ம் மற்றும் 10-ம் திகதிகளில் 19-வது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விவாதம் ஒன்றை நடத்துவதற்காக நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில், நேற்று முற்பகல், விசேட கலந்துரையாடல் ஒன்று 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் செயற்பாடுகளால் அவருக்கே அழிவு ஏற்படும்

### அமைச்சர் எஸ்.பி. ஆருடம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை பெறுவதற்காக தற்போது மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் மற்றும் சூழ்ச்சியான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அவருக்கே அரசியல் ரீதியான அழிவை ஏற்படுத்தும் என கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் எஸ்.பி. திஸா 24ஆம் பக்கம் பார்க்க....

## மேதினத்தில் ஒரே மேடையில் மைத்திரி, மகிந்த, சந்திரிகா?

(கொழும்பு)

எதிர்வரும் மே முதலாம் திகதி நடைபெறவுள்ள மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயகக குமாரதுங்க ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களால் இந்த அழைப்பு விடுக 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு ஜூலை 6ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்ட நீதிபதி அலெக்ஸ்ராஜா ஆசீர்வாதம் கிரேசியன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின்போது குற்றப்புலனாய்வு திணைக்களம் சார்பாக பொறுப்பதிகாரி ஐ.பி. ரணசிங்க தலைமையில் நான்கு அதிகாரிகள் மன்றில் ஆஜராகினர். இவர்களுடன் மன்னார் மாவட்ட நில அளவையாளர் ஏ.திலீப்குமாரும் முன்னிலையாகியிருந்தார். காணாமல்போனோர் சார்பாக சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் சட்டத்தரணிகள் வீ.எஸ்.நிறைஞ்சன், செல்வி ரனித்தா ஞானராஜா ஆகியோர் முன்னிலையாகினர். குற்றவியல் திணைக்களம் சார்பாக சாட்சியமளித்த சார்ஜண்ட் சொய்சா மன்றில் தெரிவிக்கையில்,

ஏற்கெனவே அகழ்வுப் பணி நடைபெற்ற பகுதியில் 1950 க்கு முன்பு இருந்து மயானம் இருந்ததாகவும் அந்தப் பகுதியில் இருந்த பொது மக்களிடம் இருந்தும் பெரியவர்களிடம் இருந்தும் தாங்கள் தகவல்கள் சேகரித்தனர் எனவும் அந்த இடத்தில் ஒரு பொது மயானமும் அத்துடன் பொது வைத்திய சாலை ஒன்றும் இருந்தது எனவும் கூறினார்.

அது மட்டுமின்றி தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் எல்லாம் சமய முறைப்படி புதைக்கப்பட்டுள்ளன என்றும் இதற்கு ஆதாரமாக கைகள் கால்கள் கட்டப்பட்டுள் என் என்றும் அவர் மன்றில் தெரிவித்தார்.

இதனாலேயே இப் பகுதியில் தொகையாக எவரும் புதைக்கப்படவில்லை எனவும் தெரிவித்து அறிக்கை ஒன்றையும் சமர்பித்தார். இதற்கு பதில் வாதம் புரிந்த சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா, தற்போது குற்றபுலனாய்வு பிரிவால் முன்வைக்கப்படும் இந்த கருத்து அறிக்கையாக சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் இந்த இடத்தில் பொது மயானம் இருக்கவில்லை என மன்னார் நகர சபை தலைவர் நீதிமன்றுக்கு சத்தியக்கூற்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும் சுட்டிக் காட்டினார். தவிர இப்பகுதி பங்கு தந்தை மன்றுக்கு அளித்துள்ள சத்தியக் கூற்றிலும் மயானம் இருக்கவில்லை என்றும் கூறியிருந்தமையையும் சுட்டினார்.

இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களைக் கேட்ட நீதிபதி அடுத்த தவணைக்குள் மயானம் இருந்தமைக்கான ஆதாரங்களை முன் வைக்குமாறும், அத்துடன் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியரத்னாவின் அறிக்கையையும் ஜூலை 6 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறும் அதைத் தொடர்ந்து 17.08.2015 லிருந்து 21.08.2015 வரையான காலப்பகுதியில் அடையாளம் காட்டப்படும் இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் நீதிபதி தெரிவித்தார். (செ-11)

# 3ஆம் கட்ட மீள்குடியேற்ற காணிகள் நாளை அதிகாரிகளால் பார்வையிடப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயமாகவிருந்த காணிகளில், ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என்ற புதிய அரசாங்கத்தின் அறிவித்தலுக்கமைய அவற்றின் 3ஆம் கட்ட காணிகளை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், இன்று செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிடவுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதுக்கமைய வளலாய் மற்றும் வசாவிளான் பகுதியிலுள்ள 430 ஏக்கர் காணிகள் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டது. அக் காணிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொதுமக்களிடம் கையளித்தார். இந்நிலையில் மிகுதிக் காணிகளினையும் விடுவிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, அந்தக் காணிகளில் இருந்து வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

அதற்கமைய அந்தக் காணிகளை, நாளை (இன்று) நேரில் சென்று பார்வையிடவுள்ளோம். எவ்வளவு காணிகள் மூன்றாம் கட்டமாக விடுவிக்கப்படும் என்ற உறுதியான தகவல்கள் இன்னமும் கிடைக்கவில்லை.

மக்களுக்கு குழப்பம் ஏற்படாத வகையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் எவ்வளவு காணிகள் விடுவிக்கப்படும் என்பது தொடர்பான விபரங்கள் சரியான முறையில் வெளியிடப்படும் என யாழ்.அரச அதிபர் தெரிவித்தார். (செ-11)

# எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற த.தே.கூட்டமைப்பிற்கு தகுதி உண்டு

## நியாயங்களை கூறுகிறார்-சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனைத்து தகுதிகளும் உள்ளன என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அப்பதவியை கூட்டமைப்பு கோருகிறது எனக் கூற முடியாது என்றாலும், அதில் ஒரு வெற்றிடம் வருமாக இருந்தால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வழங்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் இரண்டு பெரிய பிரதானக் கட்சிகள், அப்பதவியை வகிக்கும் வல்லமை மற்றும் தகுதியை இழந்திருந்தால், நாடாளுமன்றத்தில் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சி என்கிற வகையில் தங்களுக்கே அப்பதவி வரவேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம்.

நாடாளுமன்றத்தில் நிமால் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமையிலான குழுவிலிருந்தவர்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் பிரதான எதிர்க்கட்சி என்கிற தகைமையை இழப்பார்களானால், எண்ணிக்கையின் அடிப்படையில் அடுத்த இடத்திலுள்ள கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அந்தப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும்.

மரபுகளின்படி அப்படியான முடிவே எடுக்கப்பட வேண்டும் என்பதையே தாங்கள் கூறியுள்ளோம் அதில் எந்தத் தவறும் இல்லை.

நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப் படக் கூடிய சூழல் நிலவினாலும், எதிர்க் கட்சித் தலைவர் பதவியையும் அதையும் தொடர்புபடுத்தக் கூடாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறினார்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டமைப்புக்கு கிடைத்தால், உண்மையான எதிர்க்கட்சியாக செயல்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# நாட்டின் வாகன விபத்துகளில் 9 பேர் 24 மணிநேரத்தில் பலி

நேற்றையதினம் 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 8 மாத குழந்தையொன்று உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 21 பேர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம்-கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பகுதியில் லொறியொன்றும் முச்சக்கரவண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

தொழில் நிமித்தம் ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்று, மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் முச்சக்கர வண்டியில் இரண்டு குழந்தைகள் உட்பட 5 பேர் இருந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி, பெண்ணொருவர் மற்றும் 8 மாத குழந்தை ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த குழந்தையின் சகோதரர் மற்றும் அவர்களின் தாய் காயமடைந்த நிலையில வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்டனர்.

குழந்தையின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்த குழந்தையின் தந்தையே தொழில் நிமித்தம் வெளிநாட்டிற்கு சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை. கொழும்பு- சிலாபம் பிரதான வீதியின் மாரவில பகுதியில் பஸ் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதி நேற்றிரவு விபத்துக்குள்ளானது.

விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இரண்டு யுவதிகள் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வில்கமுவ பிரதேச சபையின் தலைவருக்கு சொந்தமான கெப் ஒன்று மஹியங்கனையில் வீதியை விட்டு விலகி நேற்றிரவு விபத்துக்குள்ளானது.

விபத்தில் 19 வயதான இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த தலைவர் உள்ளிட்ட மேலும் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியை விட்டு விலகி பயணித்த கெப் அருகில் இருந்த மின் கம்பமொன்றுடன் மோதியுள்ளது.

தலங்கம பகுதியில் நேற்று அதிகாலை கெப் ஒன்றும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் 10 சிறுவர்கள் காயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான பஸ் கல்விச்சுற்றுலா ஒன்றிற்காக பாணந்துறையில் இருந்து கண்டி நோக்கி பயணித்துக்கொண்டிருந்தது.

இந்த விபத்தில் படுகாயங்களுக்குள்ளான கெப் சாரதி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (செ-11)

# பொலிஸ் பரிசோதகர் குத்திக்கொலை

பாணந்துறை பொலிஸ் நிலையத்தின் உபபொலிஸ் பரிசோதகர் ருவான் குணசேகர கூரிய ஆயுதம் ஒன்றால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை அவரது வீட்டிலேயே இந்தக் கொலை இடம்பெற்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

# இலங்கை வருகிறார் பூட்டான் பிரதமர்

பூட்டான் பிரதமர் சேரிங் டொப்கே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மூன்று நாள் விஜயமாக அவர், எதிர்வரும் வியாழக்கிழமையன்று இலங்கை வருவதாக அரசாங்க தகவல் திணைக்களம அறிவித்துள்ளது.

இலங்கை வரும் பூட்டான் பிரதமர், ஜனாதிபதி, பிரதமர் உட்பட்ட முக்கிய ஸ்தர்களை சந்தித்து உரையாடவுள்ளார். (செ-11)


## வகுப்புக்கள்

வடமாகாண வருமான பரிசோதகர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியாவில் நடைபெறுகின்றன. (சி-606)

தொடர்புகளுக்கு :- 0766883394

## துயர் பகிர்கின்றோம்

எமது அச்சக குடும்பத்தின் உறுப்பினரான **இராசேந்திரம் செல்வானந்தன்** (கஜானந் பிறிண்டேர்ஸ் உரிமையாளர்) இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கரிகணன் தனியார் நிறுவனம்,
681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி- 604)



மிக குறுகிய காலத்தில் யாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஷைலோ ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் ஆகிய நாம் சுத்தமான, சுவையான, ஆரோக்கியமான, இயற்கையான ஊட்டங்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் SYLO ICE CREAM விற்பனை நிலையத்தை யாழ் நகர் பஸ் நிலையம் முன்புறம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

ஷைலோ ஐஸ் கிறீம்

Sylo Natural Ice Cream

இல. 442, ஆஸ்பத்திரி வீதி,
(சைக்கிள் பார்க் எதிரில்),
யாழ்ப்பாணம்.

T.P :- 021 221 7885

(9988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியந்த சிறிசேனவின் கொலையில் மர்மம்!

(கொழும்பு)

**ஜனாதிபதியின் சகோதரர் பிரியந்த சிறிசேன கோடரியால் தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த மேலும் இருவர், கொலை நடந்த இடத்தில் இருந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.**

இக் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் அவ்விருவரிடம் விசாரணை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

இக்கொலையானது ஏதேனும் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என ஆராய்வதற்கு மேலதிகமாக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பிரியந்த சிறிசேன கடந்த மாதம் 26 ஆம் திகதி பொலனறுவையில் வைத்து கோடரி தாக்குதலுக்கு இலக்கானார்.

தாக்குதலினால் பிரியந்த சிறிசேனவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.

பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரியந்த பின்னர் வான் வழியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

தாக்குதலில் படுகாயமடைந்த 43 வயதான பிரியந்த சிகிச்சை பலனளிக்காத நிலையில் கடந்த 28 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சுதந்திரக்கட்சி பிளவடைந்தால் ஓய்வு பெற்றுக் கொள்வோம்

### சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடைந்தால் ஓய்வு பெற்றுக் கொள்வோம் என கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது கட்சி இரண்டாக பிளவடைந்தால் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள நேரிடும் என தெரிவித்துள்ளனர்.

கட்சியின் உறுப்பினர்களை சந்தித்த போது அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கட்சியை மீளக் கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தனித்தனி கட்சிகளில் இருவரும் மேடை ஏறினால் இதில் யாரைத் தெரிவது என்ற நெருக்கடி நிலைமை ஏற்படும்.

தேர்தல் முறைமை மாற்றத்திற்கு முன்னதாக இரண்டு தலைவர்களையும், இணைக்க சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.

அந்த முயற்சி தோல்வியடைந்தால் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள நேரிடும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் வார இறுதி மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் 23.05.2015 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி<br>மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | — |
| நெல்லியடி | — |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய்<br>அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம்<br>கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி<br>கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


## இருவேறு விபத்துக்களில் ஐந்து பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

புத்தளம் மற்றும் மாரவில பிர தேசங்களில் நேற்றுக் காலை இடம்பெற்ற இரு வேறு விபத் துக்களில் 5 பேர் பலியானதுடன் சிலர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் முந்தல் பிரதேசத்தில் லொறி ஒன்றுடன் முச்சக்கர வண்டியொன்று நேருக்குநேர் மோதியதில் 3பேர் பலியானதுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொடவெல மாரவில வில் இடம்பெற்ற விபத்தில் இருவர் ஸ்தலத் திலேயே பலியாகி யுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் திருமதி பஞ்சரட்ணம் கனகரத்தினம்**



எமது வித்தியாலயத்தின் பகுதித் தலைவரான செல்வி தர்மசோதி கனகரத்தினம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பஞ்சரட்ணம் கனகரத்தினம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

(022)

## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி

**அமரர் ஈசக்காரீச்சர்**



2015.03.22 அன்றுதனது 88 ஆவது வயதில் காலமாகிய எமதுவித்தியாலய முன்னாள் ஆசிரியை **திருமதி . மரகதவல்லி மாணிக்கம் (ஈசக்காரீச்சர்)** அவர்களின் பிரிவுத்துயரில் பங்கேற்கும் நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

(சி-597)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.


# இராசி பலன்

**07.04.2015**
**(பங்குனி 24, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு**
**திருதியை முன்னிரவு 09.06 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 4.22 மணிவரை**
**இராகுகாலம் 3.08-4.38 மணிவரை**
**சுபநேரம் 10.38-12.08 மணிவரை**

**வளவன்**

**மேடம்** — நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவார்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**இடபம்** — பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் விருத்தியுண்டு.

**மிதுனம்** — பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** — தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** — உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஊக்கத் தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில்கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — சுய முயற்சிகள்மூலம் சுகம் காண வேண்டியநாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பணியாளர் தொல்லை அகலும்.

**துலாம்** — திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறலாம், தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம்.

**விருச்சிகம்** — செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்,

**தனுசு** — நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்** — எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், விரதம் வழி பாடுகளில் நம்பிக்கை கூடும், வரு மானம் போதுமானதாக இருக்கும் சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்** — முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள் மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** — திடீர்ச் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில்ரீதியான பயணங்களின்போது கூடுதல் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 174

## பயத்தை எதிர்கொள்ளல்



உங்கள் அஹங்காரம் கரைந்துவிடும் அச்சத்தில் இருக்கிறது. அது கரையும் பொழுது நீங்கள் உங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் முத்திரை குத்தப்பட்ட சீட்டுக்களும் கரைந்து போய் விடும்.

இது உங்கள் அஹங்காரத்திற்கு மிக அதிகம். நீங்கள் இல்லாதவர் ஆகிவிடுவீர்கள்! அதனால் நீங்கள் எதிர்க்கிறீர்கள்; இப்பொழுது குறைந்தபட்சம் உங்களைப் பொறுத்த மட்டிலாவது யாரோவாக இருக்கிறீர்கள். இந்த எதிர்ப்பு அஹங்காரத்தின் அச்சத்தில் இருந்துதான் வருகிறது. நீங்கள் மென்மையாகவும் எளிதில் ஊடுருவக்கூடிய தன்மையுடையவராகவும் மாற பயப்படுகிறீர்கள்.

மக்கள் சமூக வட்டங்களில் அதிகம் பேசுவதற்கு பயமும் ஒரு காரணம். நீங்கள் மக்களை வெறுமனே கவனித்தால், அவர்கள் தரப்பிலிருந்து எதையேனும் சொல்வதற்கு அவர்கள் மிகவும் நிர்ப்பந்தப்படுவதாக உணர்வதைக் காணலாம். மற்றவர்கள் இவர்களை ஏதுமறியாதவர்களாக் கருதிவிடக்கூடும் என்பதால் இவர்கள் ஏதேனும் பேச வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அதனால் அவர்கள்- அது பொருளற்றதாக இருந்தால்கூட- ஏதேனும் சொல்கிறார்கள். இவையனைத்தும் நீங்கள் உணர்வதற்குக் கடினமான பயத்தின் நுட்பமான வெளிப்பாடுகள்.

ஸ்வாமிஜி, நீங்கள் தெரியாதவற்றைப் பற்றிய பயத்தைப் பற்றி பேசினீர்கள். அதைப் பற்றி இன்னும் கொஞ்சம் விளக்க முடியுமா?

ஆம். நான் அங்குதான் வருகிறேன்.

பாருங்கள்... நம்முடைய தெரியாதவற்றைப் பற்றிய பயம் என்பது, இருளைப் பற்றிய பேய்கள்; மற்றும் ஆவிகள் பற்றிய, கடவுள் பற்றிய, இறுதியில் நமது சொந்த மரணம் பற்றிய பயத்தைத் தவிர வேறல்ல.

உண்மையில், நாம் நமது அச்சங்களைப் பற்றி மிகவும் அச்சப்படுகிறோம்! அதுதான் உண்மை. நாம் நமது அச்சங்களை எதிர்கொள்ள அச்சப்படுவதால் அச்சங்கள் நம்மில் பெரும் பகுதியை ஆக்ரமித்துக் கொள்ள அனுமதித்து, மேலும் மேலும் அதிகமாக அச்சமடைய ஆரம்பிக்கிறோம்.

ஒரு சின்னக் கதை....

ஒரு மனிதன் இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தான். பயணச் சீட்டு பரிசோதகர் அவனிடம் வந்து அவனது பயணச் சீட்டைக் கேட்டார். அவன் பைத்தியம் பிடித்ததுபோல், அவனது பணப்பையிலும் மூட்டை முடிச்சுகளிலும் அவனது காற்சட்டைப் பையிலும் இன்னும் எங்கெங்கோ அவனது பயணச் சீட்டைத் தேடினான். அவனைக் கவனித்துக்கொண்டிருந்த பரிசோதகர் அவனிடம் சொன்னார், ஐயா! ஏன் உங்கள் மேல் சட்டைப் பையினுள் தேடக்கூடாது?


(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

## மனித உடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட முட்டை...

வோஷிங்டன் நகரில் உள்ள ஒரு மருத்துவமனையில் மருத்துவர்கள் ஆப்ரேஷன் செய்த போது 62 வயது மனிதர் ஒருவரின் உடலில் முட்டை போன்ற வடிவில் ஒரு பொருள் இருப்பதை கண்டறிந்து அகற்றினர். அந்த பொருள் மிக கடினமாக இருந்தது. 3.33 இஞ்ச் அளவு இருந்துள்ளது.




நோயாளியின் சிறு வயதிலிருந்தே கொழுப்பு படிந்து வந்து அது முட்டை போல் வடிவமாகி உள்ளது. கால போக்கில் கொழுப்பு வளர்ந்து கட்டியாகி விட்டது என டாக்டர் Rachael Sussman தெரிவித்து உள்ளார்.

இது 2013 இல் அகற்றபட்டதாக இங்கிலாந்து மருத்துவ இதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மனித உடலிலிருந்து இவ்வளவு பெரிய போருள் அகற்றபட்டது இதுவே முதல் முறையாகும் என டாக்டர்கள் Sussman மற்றும் Jonah Murdock தெரிவித்துள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## பருப்பு தோசை

தே.பொருட்கள்:

பச்சை பருப்பு - 1 கப்,

உளுந்தம் பருப்பு- 1 கப்,

கடலை பருப்பு- 1 கப்,

இஞ்சி - சிறுதுண்டு,

கறிவேப்பிலை-சிறிது

பச்சை மிளகாய் - 6,

உப்பு -தே.அளவு



செய்முறை:


பச்சை பருப்பு, உளுந்தம் பருப்பு, கடலை பருப்பு ஆகியவற்றை 3 மணி நேரமாவது ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அவற்றை சேர்த்து, நன்றாக அரைத்து சரியான பக்குவத்தில் மாவாக்கிக் கொள்ளவும். நறுக்கிய இஞ்சி, கறிவேப்பிலை, மிளகாய், உப்பு ஆகியவற்றையும் அந்த மாவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தோசை கல்லை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு, ஒரு கரண்டி மாவை கல்லில் விட்டு தோசையாக வார்க்க வேண்டும். ஒருபுறம் வெந்ததும், மறுபுறமும் திருப்பி போட்டு வேக வைத்து எடுத்தால், சூடான பருப்பு தோசை ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை பேணுவதில் இந்தியாவை யாருமே கேள்வி கேட்க முடியாது

## பிரதமர் மோடி உரை

**இயற்கையை பேணுவதில் இந்தியாவை யாரும் கேள்வி கேட்க முடியாது என்றும், இயற்கையை மாசு படுத்துதலில் இந்தியாவின் பங்களிப்பு மிக மிகக் குறைவு என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**



மேலும், அணுசக்தி பயன்பாடு விவகாரத்தில் மேலைநாடுகள் இரட்டை வேடம் போடுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

டில்லியில் நேற்று மாநில சுற்றுச்சூழல் அமைச்சர்களின் இரண்டு நாட்கள் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

இந்தியாவின் முதல் தேசிய காற்று தர குறியீட்டை அவர் அறிமுகப்படுத்தினார். இதன்படி நாட்டில் 10 நகரங்களில், காற்றின் தரத்தை கண்டறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமர் மோடி மேலும் உரையாற்றுகையில்,

"சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரச்சினை குறித்து உலகமே கவலை கொள்கிறது. இந்தியாவுக்கு இவ்விவகாரத்தில் அக்கறை இல்லை என நினைக்கப்படுகிறது. ஆனால், இயற்கையை பேணுவதில் இந்தியாவை யாரும் கேள்வி கேட்க முடியாது. ஏனெனில், இயற்கையை மாசு படுத்துதலில் இந்தியாவின் பங்களிப்புமிக மிகக்குறைவு.

இந்தியக் கலாசாரத்தில் மட்டும்தான் சுற்றுச்சூழல் புனிதமாக கருதப்படுகிறது. கார்பன் சுவடுகளை வெளியேற்றுவதில் இந்தியா பின்வரிசையில்தான் இருக்கிறது.

புவி வெப்பமயமாவதை தடுப்பது எப்படி என உலக நாடுகளுக்கு தெரியவில்லை. கார்பன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தினால் மட்டுமே புவிவெப்பமயமாதலை தடுக்க முடியும் என நினைக்கின்றனர். இதற்கு வேறு வழியும் இருக்கிறது. நாம் நம் வாழ்வியல் நடைமுறைகளை மாற்றிக்கொண்டாலும் புவிவெப்பமயமாதலை தடுக்க முடியும். வாழ்வியல் முறையில் மாற்றம் கொண்டு வராத வரையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியமல்ல.

இந்திய கலாசாரத்தில் மறுசுழற்சி முறை பின்னிப்பிணைந்துள்ளது. நமது பாரம்பரியங்களை திரும்பிப் பார்த்தால் சுற்றுச்சூழலை பேண நமக்கு நிறைய வழிவகைகள் கிடைக்கும். சுற்றுசூழலை பாதுகாப்பதில் பாரம்பரிய முறைகளை எப்படி கையாள்வது என்பதை உலகுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

கிராமங்களில் முன் பெல்லாம் ஒரு வழக்கம் இருந்தது. முழுநிலவு நாளன்று சிறுபிள்ளைகளை நில வொளியில் ஊசியில் நூல் கோர்க்குமாறு பாட்டிகள் சொல்வர். குழந்தைகளும் அதை ஆர்வத்துடன் செய்வர். நாமும், முழுநிலவு நாளன்று மின் விளக்குகளை பயன்படுத்துவதை தவிர்க்க உறுதி எடுக்கலாம். இதை நான் கூறிய தற்காக மேலை நாட்டவர் என்னை எள்ளி நகையாடலாம்.

அதேபோல், வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிளை மட்டுமே பயன்படுத்தலாம். நான் ஒரு சைக்கிள் கம்பனி ஏஜென்டாக செயற்படுவதாக கூறலாம்

சுற்றுச்சூழலை பேணிக் கொண்டே வளர்ச்சியடைவது சாத்தியமில்லை என்ற வாதத்தை சிலர் முன் வைக்கலாம். அதை நான் மறுக்கிறேன். வளர்ச்சியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றிணைந்தே இருக்கலாம். நகராட்சி அமைப்புகள் திடக்கழிவு மேலாண்மையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அணு சக்தியை பயன் படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலை பேணலாம். ஆனால், நாம் இயற்கை பேணுவதில்லை என விமர்சிக்கும் மேலை நாடுகளே நமக்கு அணு சக்தியில் உதவவும் மறுத்து இரட்டை வேடம் போடுகின்றன. இவ்வாறு மோடி மேலும் தெரிவித்தார். (இ-5)

# விமானி அறைக்குள் விமானிகள் மோதல்

விமானப்பயணத்தின் பாதுகாப்பு குறித்து உலகம் முழுவதும் அச்சம் எழுந்துள்ள நிலையில், ஏர் இந்தியா விமானத்தில், விமானம் புறப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன் விமானியின் அறைக்குள் விமானிகள் மோதிக்கொண்ட சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஏர் இந்தியா 611 என்ற விமானம் நேற்று முன்தினம் மாலை ஜெய்பூரில் இருந்து டில்லி புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்துள்ளது. அப்போது கப்டன் விமானத்தில் எத்தனை பயணிகள் உள்ளனர் என்பது உள் ளிட்ட சிலவற்றை குறித்து எழுதி தருமாறு துணை விமானியிடம் கேட்டுள்ளார். இதன் காரணமாக இரு விமானிகளுக்கும் இடையே வாய்ச் சணடை எழுந்துள்ளது. இருப்பினும் விமான சேவையின் நலன் கருதி விமானி விமானத்தை இயக்கியுள்ளார். எனினும் இந்த சம்பவத்தை சிறிய அளவிலான வாக்குவாதம் தான் என்றும் மேற்கொண்டு எதுவும் நடைபெறவில்லை என ஏர் இந்தியா விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கூறுகையில் "துணை விமானிக்கும், கப்டனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு சுமுகமாக பிரச்சினை தீர்க்கப்பட்டது" என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் விபத்துக்குள்ளான ஜேர்மன் விங்ஸ விமானம் விபத்துக்குள்ளாக துணை விமானியின் செயற்பாடே காரணம் என தெரிய வந்துள்ள நிலையில், மேற்கண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# டில்லி விமானநிலையத்தில் 2கோடி மதிப்புள்ள தங்கக் கட்டிகளைக் கடத்த முயன்றவர் கைது

டில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தின் சர்வதேச முனையத்தில் நேற்று சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது டுபாயில் இருந்து ஆப்கானிஸ்தான் செல்வதற்காக வந்திருந்த ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரிடம் சோதனை நடத்திய போது சுமார் 1.94 கோடி மதிப்புள்ள தங்கக் கட்டிகளை அவர் கடத்திச் செல்ல முயன்றது கண்டறியப்பட்டது.

இதையடுத்து அவரிடம் இருந்து தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவரை கைது செய்தனர்.


கடந்த ஒரு ஆண்டுகளில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய கடத்தல் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் 55 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகளை கொண்டு செல்ல முயன்ற ஆப்கான் நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மும்பை போர்க்கப்பல் மூலம் ஏமனிலிருந்து 440 பேர் மீட்பு

## கிளர்ச்சிப்படைகள் மீது தாக்குதல் தீவிரம்

இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். மும்பை போர்க்கப்பல் மூலம் ஏமனில் இருந்து 440 பேர் மீட்கப்பட்டுள்ளனர். ஏமன் நாட்டில் ஹவுத்தி கிளர்ச்சிப் படையினருக்கும் ஜனாதிபதி மன்சூர் ஹதி படையினருக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. ஜனாதிபதிக்கு ஆதரவாக சவுதி அரேபிய கூட்டுப் படைகள், கிளர்ச்சிப் படைகளை குறி வைத்து வான்வழி தாக்குதலை நடத்தி வருகின்றன.



இதனால் ஏமனில் பணியாற்றி வரும் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் போர்முனையில் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களை மீட்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதுவரை கப்பல், விமானம் மூலம் 1350 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏமனின் ஏடன் நகரில் சிக்கித் தவித்த இந்தியர்களை மீட்க ஐ.என்.எஸ். மும்பை போர்க்கப்பல் அந்த நகர துறைமுகத்துக்கு சென்றது. ஆனால் அங்கு கடும் சண்டை நடைபெற்று வருவதால் துறைமுகத்துக்கு செல்ல முடியவில்லை. சுமார் 6 கி.மீற்றர் தொலைவுக்கு முனபாகவே கப்பல் நிறுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து 12 சிறிய ரக படகுகளில் இந்தியர்கள் ஐ.என்.எஸ். மும்பை கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தக் கப்பல் மூலம் 179 இந்தியர்கள் உட்பட 17 நாடுகளைச் சேர்ந்த 440 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது, உலகம் ஒரே குடும்பம் என்பது ஐ.என்.எஸ். மும்பை கப்பல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதில் ஹங்கேரி, ஏமன், பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், எகிப்து, நேபாளம், கனடா, லெபனான், இலங்கை, மொராக்கா, சிரியா, இத்தாலி, ருமேனியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

ஐ.என்.எஸ். கப்பல் ஏமனில் இருந்து அருகில் உள்ள ஜிபோத்தி நாட்டின் தலைநகர் ஜிபோத்தி சிட்டிக்கு நேற்று முன்தினம் பத்திரமாக வந்து சேர்ந்தது.

அந்த நகரில் மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் வி.கே.சிங் முகாமிட்டு மீட்புப் பணிகளை துரிதப்படுத்தி வருகிறார்.

மீட்கப்படும் இந்தியர்கள் ஜிபோத்தி நாட்டில் இருந்து விமானம், கப்பல் மூலம் தாயகம் திரும்பி வருகின்றனர். இப்போது ஜிபோத்திக்கு அழைத்து வரப்பட்டுள்ள 179 இந்தியர்களும் உடனடியாக தாய் நாட்டுக்கு திரும்பவுள்ளனர். (இ-5)

பாரதச் செய்தி

# ராகுல்காந்தி குறித்து யாரும் கவலைப்படத் தேவையில்லை

## சல்மான் குர்ஷித் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய காங்கிரஸ் கட்சியின் உப தலைவர் ராகுல் காநதி குறித்து எதிர்க்கட்சிகள் கவலைப்பட தேவையில்லை அவர் பாதுகாபபாக உள்ளார் என முன்னாள் மத்திய அமைச்சரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான சல்மான் குர்ஷித் தெரிவித்துளளார்.

மேலும் அவர் கூறும் போது, ராகுல் எங்கு இருக்கிறார் என்று நினைப்பதை விட்டுவிட்டு காலம் கடந்து பெய்த மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதில் எதிர்க்கட்சியினர் கவனம் செலுத்த வேண்டும். காங்கிரஸ் கட்சியை தலைமையேற்று நடத்தப்போகும் தலைவர் அவர்தான். அவர் எப்பொழுது திரும்பி வர வேண்டுமோ அப்பொழுது இந்த உலகமே பார்க்கும் அளவுக்கு சிறப்பான சாதனைகளுடன் வருவார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. கிழக்கு பிரதேச சபை பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேசசபை பணியாளர்கள் 10 பேர், நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுகாதார, பாதுகாப்பு மற்றும் நூலக மேற்பார்வை பணியாளர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி பணிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட தாங்கள் கடந்த 11 வருடங்களுக்கு மேலாக அமைய அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும், தங்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கடந்த 2014 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அமைச்சால் கூறப்பட்டபோதும், இதுவரையில் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையென பணியாளர்கள் தெரிவித்தனர்.

நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அதிகாரத்தை பிரதேச சபை தவிசாளர் கொண்டிருந்த போதும் நிரந்தர நியமனம் வழங்காதிருப்பது தங்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த பிரதேச சபையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# தமிழ்- சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவுஸ். அரசாங்கம் முயற்சி!

## அந்நாட்டு தூதுவர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்-சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தினையும் புரிந்துணர்வினையும் ஏற்படுத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சி செய்யும் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய நாட்டு தூதுவர் ரொபின்மூடி யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையிடம் தெரிவித்துள்ளார்.



நேற்றைய தினம் யாழ்.வந்த அவுஸ்திரேலிய நாட்டுத்தூதுவர் யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினை ஆயர் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே ரொபின்மூடி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இச்சந்திப்பு தொடர்பில் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால அரசியல் மாற்றத்தின் பின்னர் யாழ்.மாவட்டம் எவ்வாறு உள்ளது? யாழ்.மாவட்டத்திலும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் பிரதிபலிக்கின்றதா? என தூதுவர் கேட்டிருந்தார். மகிந்தவின் ஆட்சி மாறி மைத்திரியின் ஆட்சி வந்துள்ளது. இப்புதிய ஆட்சியில் தற்போது வரை பெரிதாக மாற்றம் ஏதும் ஏற்படவில்லை சிறு சிறு மாற்றங்களே ஏற்பட்டுள்ளன.

இராணுவம் பிடித்து வைத்துள்ள மக்களின் காணிகளை விடுவிப்பதாக கூறி சுமார் ஆயிரம் ஏக்கர் அளவு நிலப்பரப்பினை முதற்கட்டமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து அதில் தற்போது 400 ஏக்கர் அளவு நிலப்பரப்பினை விடுவித்துமுள்ளனர். இதனை விட மேலும் ஒரு ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை விடுவிப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

அண்மையில் உயர்பாதுகாப்பு வலயத்தில் விடுவிக்கப்பட்ட நிலங்களுக்கு நான் சென்று பார்த்திருந்தேன். விடுவிக்கப்பட்ட தமது காணிகளை மக்கள் துப்புரவு செய்து அதில் குடியேறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். தமது இடம் தமது நிலம் என்ற உணர்வு அந்த மக்களிடையே உள்ளதனை அவதானிக்க முடிகின்றது. அறிவித்த படி முழு அளவு காணிகளையும் அரசாங்கம் விடுவிக்காவிடினும் எதிர்வரும் காலங்களில் விடுவிப்பார்கள் என ஓரளவு எமக்கு நம்பிக்கையளிக்கின்றது என தெரிவித்திருந்தேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்து பலதரப்பட்டவர்களினையும் சந்தித்து சென்றிருந்தார். பிரதமரின் வடக்கு வருகை ஏதும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா? என தூதுவர் என்னிடம் கேட்டிருந்தார். அதற்கு, பிரதமர் இங்கு வந்து பலரை சந்தித்து சென்றுள்ளமை மகிழ்ச்சியானதே. எனினும் எமது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை ரணில் சந்திக்காமல் சென்றுள்ளமை எமக்கு வருத்தமளிக்கின்றது. அதனால் ரணிலின் பயணம் எமக்கு திருப்தியளிக்கவில்லை.

எனினும் இங்கு வந்த ரணில் எமது மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளினையும் கேட்டறிந்து சென்றுள்ளார். இதன் போது இங்குள்ள இராணுவத்தின் இறுக்கமான கட்டமைப்புக்களினையும் அவர் பார்த்து சென்றுள்ளார்.

மக்கள் செய்ய வேண்டியவற்றை இராணுவம் செய்து வருகின்றது. இவை இராணுவம் செய்ய வேண்டியவை அல்ல என அவர் அறிந்து கொண்டுள்ளார் என நம்புகின்றோம்.

முன்னாள் போராளிகள் இராணுவத்தினால் தற்போதும் கண்காணிக்கப்படுவதாகவும் அச்சுறுத்தப்படுவதாகவும் முன்னாள் போராளிகள் ரணிலிடம் முறையிட்டுள்ளனர். அதனை பிரதமர் கவனமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இராணுவமும் முன்னாள் போராளிகளை தொடர்ந்தும் கண்காணிப்பு செய்வதனை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தேன்.

அடுத்து மீனவர் பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்த அவர், இந்திய- இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தனிப்பட்டவர்கள் பேசித்தீர்க்க முடியாது என்றும் இதனை இரு நாட்டு அரசாங்கங்களுமே பேசித்தீர்க்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வீட்டுத்திட்டத்தினை அவுஸ்திரேலிய அரசு கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான வாழ்வாதார திட்டங்களை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

சிங்கள- தமிழ் மக்களிடையே புரிந்துணர்வினையும் உடன்பாட்டினையும் ஏற்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளினையும் முயற்சிகளினையும் மேற்கொள்ளும் என தூதுவர் தெரிவித்ததாக யாழ். ஆயர் தெரிவித்துள்ளார். (இ-4)

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

பிரெஞ்சு முனைவர் சதாசிவம் சச்சிதானந்தம் எழுதிய 'தெரியத் தெரியத் தெரியாமை தெரியும்!' என்ற நூலின் அறிமுக விழா நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் இரா. சிவச்சந்தரன் நூலின் விமர்சன உரையை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் ஐ.தயானந்தராஜா, 'கோல்டன் ஈகிள்' நிறுவன இயக்குநர் க.தர்மகுலசிங்கம், டாக்டர் வை.யோகேஸ்வரன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.தயாளன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெறுவர்.

பேராசிரியர் முனைவர் சச்சிதானந்தம் ஏற்புரை வழங்குவார். (இ-3)




## ஆடு திருட்டு அதிகரிப்பு!

(கரணவாய்)

தெல்லிப்பழை மற்றும் மல்லாகம் பகுதிகளில் ஆடுகள் திருடும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதால் பொதுமக்கள் விசனமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பகல் நேரங்களிலும் இவ்வாறான திருட்டுக்கள் இடம்பெறுவதால் பொது மக்கள் தமது ஆடுகளை மேய்ச்சல் நில ங்களில் விடுவதற்கு அஞ்சுகின்றனர்.

திருடர்கள் ஆட்டோவைப் பயன்படுத்தி ஆடுகளைக் கடத்துவதாகவும் இதில் மூன்று நபர்கள் வரை ஈடுபடுவதால் பொதுமக்கள் அதனைத் தடுத்து நிறுத்த அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் வருமானத்தை ஈட்டும் நோக்கில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பயனாளிகளின் கால்நடைகள் திருடப்படுவது கால்நடை வளர்ப்பில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி பிரிவினால் இச் சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சு. முரளீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்வதற்காக துறைசார்ந்த அனைவரையும் கலந்து ஆதரவளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (இ-3-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையுடன் தாய் தற்கொலை

(கொழும்பு)

மிஹிந்தலை- தொரமடலாவ பகுதியில் தாய் ஒருவர் தனது குழந்தையுடன் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த தாய் தனது குழந்தையுடன் நேற்றுக் காலை கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சம்பவத்தில் 22 வயதுடைய தாய் தனது ஒன்றரை வயதுடைய ஆண் குழந்தையுடன் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## சம்பூர் முகாமில் பயிற்சி பெற்றுவந்த கடற்படைவீரர்கள் பூசாவிற்கு மாற்றம்

சம்பூர் கடற்படை முகாமில் பயிற்சி பெற்று வந்த வீரர்கள் பூசா முகாமிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பயிற்சி பெற்று வரும் 300 வீரர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளடங்கலாக 400 பேர் இவ்வாறு பூசா முகாமிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சம்பூர் விதுர கடற்படை முகாமை அகற்றிக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த தீர்மானத்திற்கு அமைய குறித்த முகாமில் நிலைகொண்டிருந்த பயிலுநர் வீரர்கள் உள்ளிட்ட 400 பேர் பூசா முகாமிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த முகாம் அமைக்கப்பட்டிருந்த 237 ஏக்கர் காணியை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் புலிகள் முகாம்களை அமைத்ததனைத் தொடர்ந்து இந்த விசேட கடற்படை முகாம் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சம்பூர் கடற்படை முகாம் அகற்றப்படுவது குறித்து அறிவிக்கப்படவில்லை என கடற்படையினர் அண்மையில் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## க.பொ.த.சாதாரண தரப் பெறுபேறுகள் -2014

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

த.நிவேக்கா-6ஏ2பிசி, சி.டனிஸ்ரன்-4ஏ3பி2சி, த.நிவேதிகா-3ஏ2பி3சி, சே.நதி ஸ் ரன்-3ஏ2பி2சி2எஸ், ஜெ.தனுசியா-3ஏபி2சி 2 எஸ், தி.திலக்சன்-3ஏ 4சி2எஸ், பு.சார ங்கன்-2ஏ3பி2சி எஸ், வெ.தராட்சினி-2ஏ 4சிஎஸ், ர.பிரியதர்சன்-ஏ2பி4சிஎஸ், சூ.சுலக்ஷன்-ஏபி 3சி2எஸ், தி.ஜெனரூபன்-ஏ3பி 2சி2 எஸ், கு.லக்ஷன்-ஏபி3சி3எஸ், கா. கஜீபா-ஏபி 3சி3எஸ், பு.சேதுஜா-ஏபி3சி3எஸ். (இ)

## 21 ஆம் திகதிக்கு முன்னர் மிதக்கும் ஆயுதகளஞ்சியம் பற்றிய விசாரணை அறிக்கை

அவன்காரட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுத களஞ்சியம் தொடர்பான விசாரணை அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

மிதக்கும் ஆயுத களஞ்சியம் உட்பட குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றில் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு கிடப்பில் போடப்பட்ட சில ஆவணங்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் சகல விடயங்களும் அடங்கிய அறிக்கை தாக்கல் செய்வதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்காக தேசிய நிறைவேற்றுச் சபைக்குள் தலையீடுகளை மேற்கொண்டு சகல செயற்பாடுகள் குறித்தும் அறிக்கைகளை பெற்று முழுமையான மீளாய்வை மேற்கொள்ளும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனை ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிப்படுத்தி காட்ட வேண்டும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட காலத்திற்கு அமைய இந்த பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்றால், தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பது தொடர்பாக ஜே.வி.பி. தீர்மானம் ஒன்றை எடுக்கும் எனவும் அதன் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அதிபர்களுக்கான கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலையின் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)


**விற்பனைக்குண்டு**

மில்லில் பயன்படுத்தப்படும் அனைத்து வகையான பொருட்களும், அரைக்கும் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :-
0777818510

(9871)

**வாழ்க்கையில் வெறுப்பா ?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(சி-9787)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776


## வடக்கு மாகாண தேசிய பாடசாலை அதிபர்களுக்கான விண்ணப்பம் கோரல்

வடமாகாணத்தில் உள்ள 16 தமிழ், முஸ்லிம், சிங்கள தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, மல்லாவி மத்திய மகா வித்தியாலயம், முல்லைத்தீவு சம்பத்நுவர மகா வித்தியாலயம், முழங்காவில் மத்திய மகா வித்தியா லயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலை, வவுனியா காமினி வித்தியாலயம், மன்னார் சித்தி விநாயகர் தேசிய பாடசாலை, மன்னார் அல் அஸார் தேசிய பாடசாலை, முசலி தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

57 வயதுக்கு மேற்படாத, கல்வி நிர்வாக சேவையின் I,II,III ஆம் வகுப்பு அல்லது அதிபர் சேவையின் 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முன்னைய அறிவித்தலுக்கமைய சில தேசிய பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைத்த உத்தியோகத்தர் புதிதாக அப்பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதுடன் விண்ணப்பிக்கும் பாடசாலைகளில் ஏதாவது மாற்றம் இருப்பின் அதற்கான புதிய விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 01.04.2015 தினகரன் பத்திரிகையை பார்வையிடவும். (இ)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 3/4<br>உயரம்: 6'5"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4374 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 36 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/820 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 39.5 சூரி செவ் 9இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ: B/4375 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 42.25 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/824 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 8<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ பிரான்ஸ் Not PR<br>தொ.இ: B/4376 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 16.75<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: சித்தமருத்துவர்<br>எதர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/826 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 47<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L சொந்த தொழில்<br>தொ.இ: B/4377 | பிறப்பு: 1977 RC<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: G/827 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



**யாழ்ப்பாணப் பல்லைக்கழகம்**
**சித்த மருத்துவ அலகு**

**2013/2014 கல்வி ஆண்டுக்கான**
**கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவுக்கு 2013/2014 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 20.04.2015 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவப்பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அனைத்துப் புகுமுக மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-600)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துச் சாரதி மீது சரமாரியாகத் தாக்கு!

## தடுக்க முயன்ற பயணிகளை தாக்க முற்பட்டார் சாரதி

(முல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்திற்கு சொந்தமான பேருந்தின் சாரதியை வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்திற்குச் சொந்தமான பேருந்தின் சாரதி கடுமையாகத் தாக்கியதுடன் இதைத் தடுக்க முற்பட்ட பயணிகளுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்து அவர்களையும் தாக்க முயன்ற சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் அண்மையில நண்பிற்பகல் 12.30 மணிக்கு மீசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடைப்பட்ட பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவிலிருந்து முற்பகல் 10.30மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி 50இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் தனியார் பேருந்து ஒன்று புறப்பட்டது.

இப்பேருந்து ஏ-9வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த வேளை அதேவழியாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்தின் சாரதி முல்லைத்தீவு பேருந்திற்கு முன்பாக சென்று குறுக்கே நிறுத்திவிட்டு சாரதியை வாகனத்திலிருந்து வெளியே இழுத்து சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து பதற்றம் அடைந்த பயணிகள் இரு பேருந்துகளின் சாரதிகளையும் விலக்கிவிட முற்பட்ட சமயம் வவுனியா பேருந்து சாரதி பயணிகளைத் தாக்க முயற்சித்ததுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டதாக பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து ஏ-9வீதியின் போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டிருந்தது.

இரு பேருந்துகளின் சாரதிகளும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறான அசம்பாவிதங்கள் பேருந்துகளில் நடைபெறுவதை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கவன த்தில் கொண்டு அச்சமின்றி தாம் பயணத்தை மேற்கொள்வதற்கு ஆவன செய்யவேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

## நூல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவ முதல்வர் சங்கம் வெளியிடும் திசை முகங்கள் எனும் நூல் வெளியீட்டு விழா இன்றுசெவ்வாய்க்கிழமை முற்பகல்11மணிக்குவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட மாணவத் தலைவன் செல்வன்.பகஜீந்தன்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கரைச்சி உதவி அரசாங்க அதிபர் கோ.நாகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை சிரேஷ்ட உளநல வைத்தியர், டாக்டர்மாஜெயராசா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2-271)

## புதிதாக நியமனம் பெற்ற

# முல்லை. கல்வி வலய ஆசிரியர்களுக்கு சுயவிபரக் கோவைகள் ஆரம்பித்தல்

(முல்லாவி)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் புதிதாக நியமனம் பெற்று கடமையினை ஏற்றுள்ள ஆசிரியர்களுக்கான சுயவிபரக் கோவைகள் ஆரம்பித்தல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே புதிதாக நியமனம் பெற்று முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையினை ஏற்றுள்ள ஆசிரியர்களை அன்றைய தினம் சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சுயவிபரக்கோவைகளை ஆரம்பிப்பதற்கான வலயக்கல்வித் திணைக்களத்திற்கு வருகை தரவுள்ள ஆசிரியர்கள் தமக்கான ஆவணங்களை எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார்.

இதற்கமைய பிறப்புச்சான் றிதழின் மூலப்பிரதிகள் இரண்டும் க.பொ.த.(சா/த) மற்றும் க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேற்றின் பிரதிகள் இரண்டும் பட்டச்சான்றிதழ் கல்வியியற் கல்லூரி பரீட்சைப் பெறுபேற்றின் பிரதிகள் இரண்டும் ஆள் அடையாள அட்டை பிரதிகள் மூன்று முதல் நியமனக்கடிதப்பிரதிகள்மூன்று, நற்சான்றிதழ் இரண்டும் வதிவிடச் சான்றிதழ் ஒன்று, கணவன்/மனைவி பிறப்புச் சான்றிதழ் மூலப் பிரதி , கணவன்/மனைவி ஆள் அடையாள அட்டைப்பிரதி, பிள்ளை பிறப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதி என்பவற்றுடன் உரிய நேரத்தி ற்கு முன்னதாக சமுகமளிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# ஓமந்தையில் தந்தை செல்வா முன்பள்ளி திறந்து வைப்பு



(குருமன்காடு)

இலங்கை தமிழசுக்கட்சியின் ஸ்தாபகர் அமரர் சி.ஜே.வி. செல்வநாயகத்தின் 117ஆவது சிரார்த்த தினம் கடந்த 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து ஓமந்தையில் தந்தை செல்வா முன்பள்ளி திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, ஓமந்தை பகுதியில் மருதங்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளி வவுனியா மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமாகிய ப.சத்தியலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா பிரதேச தமிழரசுக் கட்சியின் செயலாளர் மா. சிவசோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், மா.தியாகராசா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும்கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் அண்மையில் மீள்குடியேறிய இந்த பிரதேசத்தில் இதுவரை முன் பள்ளி மரத்தடியில் இயங்கி வந்த நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் கனேடிய கிளையின் நிதியுதவியுடன் இந்த முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## ஆறுமுகத்தான் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



சுவாமி ரிஷி தொண்டுநாத சுவாமிகளின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறுமுகத்தான்குளம் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கே கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வன்னி யுத்தத்தாலும், வறுமையினாலும் மிகவும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வானது ஆறுமுகத்தான்குளம் அ.த.க பாடசாலையில் வைத்தியர் கே.பி.பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியர் கே.பி.பிரசாந்தன் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோஜினி கனகரத்தினம், மனிதநேயம் அமைப்பின் பணியாளர் சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)




## சமுர்த்தி மீளாய்வு பதிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகை புரம் (கே-03) கிராமத்தின் சமுர்த்தி பயனாளிகளுக்கான மீளாய்வுப் பதிவு எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்ணகை புரத்தில் அமைந்துள்ள ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மட்டுமே மீளாய்வுப் பதிவு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுகாதார வாரத்தையொட்டி சிரமதான பணிகள் குறித்த வங்கியில்நடைபெறவுள்ளன. (2)

# நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(வவுனியா)

வவுனியா இந்து மாமன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் அமரர் நல்லதம்பி செல்லையாவின் நினைவு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா, எதிர்வரும் 10 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள இந்துமாமன்ற வளாகத்தில் நடைபெறும்.

இந்துமாமன்றத் தலைவர், இறைபணிச்செம்மல் வை.செ.தேவராசா தலைமையில் இடம்பெறும் இவ்வ்ழாவிற்கு திருமுறையினை க.குலேந்திரன் ஓத, வரவேற்புரையினை தமிழ்மாமணி,தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்துவார். யாழ்ப்பாணம், நல்லை ஆதீனக்குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புதிய மண்டபத்திற்கான அத்திபாரக்கல்லை நாட்டி, பெயர் பலகைக் கல்லை திரை நீக்கம் செய்துவைத்து ஆசியுரை வழங்கவுள்ளார்.

நன்றியுரையினை இந்து மாமன்றச் செயலாளர், சிவநெறிப்புரவலர் சீ.ஏ. இராமசாமி நிகழ்த்துவார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை அதிகாரத்திற்கு கொண்டுவர முயற்சிப்பது ஜனாதிபதியாக்குவதற்கல்ல

## தயான் ஜயதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வர முயற்சிப்பது அவரை ஜனாதிபதியாக்குவதற்கல்ல என பேராசிரியர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது முதல் பாதியில் வெளியுறவுக் கொள்கை சிறப்பாக இருந்தது ஆனால் இரண்டாவது பாதியில் அது சிதறிவிட்டதாக அவர் கூறியுள்ளார் என சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே எதிர்வரும் காலத்தில் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பிரதமராக நியமித்து, மகிந்த ராஜபக்ஷவின் கடந்த கால வேலை திட்டத்தை நிறைவேற்றுவதனால் நாடு செழிப்படைவதற்கான வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஏமனிலிருந்து இலங்கையர் ஐந்து பேர் நாடு திரும்பினர்

ஏமனிலிருந்து இலங்கையர் ஐவர், கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

ஏமனில் இடம்பெறும் யுத்தத்தில் சிக்கிய இலங்கையர் ஐவர், ஓமான் மஸ்கெட்டுக்கு வருகைதந்து விமானத்தின் ஊடாகவே நேற்று திங்கட்கிழமை அதிகாலை நாடு திரும்பினர்.

இலங்கையர்களில் இன்னும் பலர் மோதல்கள் இடம்பெறும் இடங்களில் சிக்கியுள்ளதாக அங்கிருந்து நாடு திரும்பியோர் தெரிவித்தனர். அத்துடன் ஏமனிலிருந்து வெளியேறமுடியாத இலங்கையர் 43பேர் பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுத்து கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஏமனில் சிக்கியிருக்கின்ற இலங்கையர்களில் 43 பேரை நாட்டுக்கு திருப்பியழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள தாக வெளிவிவகார பதில் அமைச்சர் அஜித் பி.பெரேரா, நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார். (இ-5)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில்

## வேட்புமனு பெறமுடியாதவர்கள் ஐ.தே.கட்சியில் இணைகின்றனர்

### அர்ஜுன தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்பு மனுக்களை பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டு வருவதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் முக்கியமான ஓர் தேர்தலாகும்.

தேர்தலின் போது சூதாட்டக்காரர்கள், போதைப்பொருள் எதனோல் வியாபாரிகள், மோசடியான வர்த்தகர்களுக்கு வேட்பு மனுக்களை வழங்க வேண்டாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்பு மனுக்களை பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டு போட்டியிட முயற்சிக்கின்றனர்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினருக்கு பிரதான இரண்டு கட்சிகளுமே வேட்பு மனுக்களை தாகல் செய்ய அனுமதிக்கக்கூடாது.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் தகதி கிடைக்கப்பெற்ற அரசியல் வெற்றியை திசை திருப்பக் கூடாது.

எதிர்வரும் தேர்தலில் நல்லவர்களில் மிக நல்லவரைத் தெரிவு செய்ய மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அர்ஜுன ரணதுங்க அண்மையில் கம்பஹா பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது தெரிவித்துள்ளார். (இ-5)

## ஏமன் நாட்டிலிருந்து இலங்கையர்கள் 58 பேர் அழைத்து வரப்படுகின்றனர்

ஏமனில் சுமார் 100 பேர் வரை தொழில் புரிகின்றனர். அவர்களில் 58 பேர் ஏமனிலிருந்து சீன விமானம மூலம் பஹ்ரேய்னுக்கு அழைத்து வரப்பட்டு பின்னர் அங்கிருந்து மிஹின்லங்கா விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

மேலும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏமனில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்கள் 58 பேரையும் மிஹின் லங்கா விமானம் மூலம் இலங்கை வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஏமனின் தலைநகர் 'சனா' என்ற பிரதேசத்தில் தங்கியிருந்த 58 பேரே முதற்தடவையாக அழைத்து வரப்படுகின்றனர்.

ஏமனின் ஏனைய பகுதிகளிலுள்ள இலங்கையர்களையும் தலைநகர் சனா பிரதேசத்திற்கு அழைத்து வந்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை, ஏமனிலுள்ள இலங்கையர்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் தொலைபேசி இலக்கங்களான 011-5839414 அல்லது 011-2323015 என்ற இலக்கங்களூடாக தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

ஏமனிலுள்ள சுமார் 20 பேர் தங்களுக்கு நாடு திரும்ப அவசியமில்லையென்றும் அவர்களுக்கு எந்தவித அச்சுறுத்தலும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஐந்து இலங்கையர்கள் தென்னாபிரிக்காவின் ஜீபுட் அரசு பகுதியில் வசிக்கின்றனர். அவர்களையும் இலங்கைக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிலர் வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளாததாலும் வேறு சிலர் பிற நாடுகளிலிருந்து ஏமனிற்குள் சென்றிருப்பதாலும் இலங்கையர் தொடர்பிலான முழுமையான விபரங்களை பெறமுடியாதுள்ளது.

இவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களை பெறுவதற்காக வெளிவிவகார அமைச்சும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. (இ-5)

## பிரதமர் ரணிலுக்கும் எனக்கும் இடையில் நெருங்கிய பிணைப்பு காணப்படுகின்றது

### திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமக்கும் இடையில் மிக நெருங்கிய பிணைப்பு காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியன் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த நாளுக்கு தொலைபேசி அழைப்பின் ஊடாக நான் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன்.

அது எனது கடமையாகவே கருதுகின்றேன்.

எனக்கும் அவருக்கும் இடையில் மிக நெருங்கிய பிணைப்பு காணப்பட்டது.

அவரை கட்சியிலிருந்து வெளியேற்ற முயற்சித்த போது யார் அதனை நிறுத்தினார்கள் என்பதனை எவரையும் விட பிரதமர் அறிவார்.

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது என்ன விசேஷம் என பிரதமர் என்னிடம் கேட்டார்.

பின்னொரு நேரத்தில் சந்திப்போம் என அவர் என்னிடம் கூறினார் என திஸ்ஸ அத்தநாயக்க சிங்கள பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

## பெண்கள் கொலை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுப்பு!

2011 ஆம் ஆண்டிலிருந்து காஹவதை பகுதியில் பெண்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொது அமைதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த கொலை சம்பவங்களுடன் தொடர்புடையோரை அடையாளம் காண்பதே இதன் நோக்கம் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.


வேறு பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறவில்லை எனவும் காஹவத்தை பகுதியில் திட்டமிட்டவகையில் பெண்கள் கொலைசெய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்

இதேவேளை காஹவத்தை கொட்டகெத்தன பகுதியில் நேற்று முன்தினம் காணாமற்போன [illegible] பிள்ளைகளின் தாயாரை [illegible] நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ருவன குணசேகர தெரிவித்துள்ளார்

காஹவத்தை பகுதியை அண்மித்த பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமைபுரியும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு தேடுதல் நடவடிக்கைக்கு கடற்படையினரின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேசிய ரக்பி குழாமிலிருந்து யோசிதவின் பெயர் நீக்கம்



எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள ஆசிய ரக்பி போட்டித் தொடரு க்கான 40 பேரைக் கொண்ட இலங்கைக் குழாமில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோசிதவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆசிய பிராந்திய வலய நாடுகளுக்கு இடையில் நடைபெறும் மிக முக்கியமான போட்டிகளில் ஒன்றாக இந்தப் போட்டித் தொடர் கருதப்படுகின்றது.

2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் தேசிய அணியின் தலைவராக யோசித 3 வருடகாலம் கடமையாற்றியிருந்தார்.

யோசிதவின் தலைமையில் 2012ஆம் ஆண்டில் இரண்டாம் இடத்தையும், 2013ஆம் ஆண்டில் போட்டித் தொடர் ஒன்றின் சம்பியன் பட்டத்தையும் இலங்கை அணி வென்று ஆசியாவின் 4 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டிருந்தது.

அவ்வாறான வெற்றிகளை யோசிதவின் தலைமையில் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் இம்முறை இடம்பெறவுள்ள போட்டிகளில் அவருடைய பெயர் உள்ளடக்கப்படாமைக்கான காரணத்தை இலங்கை ரக்பி வாரியத்தின், தலைமை நிர்வாக அதிகாரி ரோஹான் குணரத்னவிடம் வினவப்பட்டுள்ளது.

ஏற்கனவே இறுதி அணிக்கான வீரர்களை தேர்வு செய்துவிட்டோம். எனினும் இதுவரை இறுதி அணி வீரர்களின் பட்டியல் என் கையில் கிடைக்கவில்லை. நாளை கிடைத்துவிடும் அதுவரை எவ்வித பதிலும் வழங்க முடியாதென தலைமை நிர்வாக அதிகாரி ரோஹான் குணரத்ன தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

1110

## தங்க முட்டையிடும் வாத்து!

ஒரு கிராமத்தில் ஷியாம் என்ற அநாதைச் சிறுவன் இருந்தான்.

நாள் முழுவதும் கூலி வேலை செய்து அதில் கிடைத்த சொற்ப வருமானத்தில் அரை வயிற்றுக்கு சாப்பிட்டுக் காலத்தை ஓட்டினான்.

தனக்கென்று வசிக்க ஒரு சிறிய குடிசை அமைத்துக் கொண்டான். வீட்டிலேயே ஒரு பெட்டைக் கோழி யையும் வளர்த்து வந்தான். கோழியிடும் முட்டைகளை விற்று விடுவான்.

என்றாவது கூலி வேலை கிடைக்க வில்லையெனில், முட்டைகளை விற்காமல் அவற்றை அவித்து உண்டு விடுவான்.

அவனுக்குப் பக்கத்து வீட்டில் தனராஜ் என்ற பணக்காரன் வசித்து வந்தான். அவன் மிகவும் பொறாமை பிடித்தவன்.

மற்றவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் காணப் பொறுக்காது அவனுக்கு!

ஷியாம் வளர்த்து வந்த கோழி மதமதவென்று இருந்ததைக் கண்டு ஒருநாள் அந்தக் கோழியைப் பிடித்துக் கொன்று தின்றுவிட்டான்.

மாலையில்ஷியாம்கோழி யைக் காணாமல் திடுக்கிட்டான்.

கோழியின் இறகுகள் தனராஜ் வீட்டின் கொல்லைப்புறம் சிதறியிருந்ததைக் கண்டதும், நேராக அவனிடம் சென்று அதைப் பற்றிக் கேட்டான்.

தனராஜ் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டதும், "அது உன கோழியா? எனக்குத் தெரியாது! என பூனை ஏதோ ஒரு கோழியை கவ்விக் கொண்டு வந்தது.



அது உன்னுடையது என்று தெரியாமல் தின்றுவிட்டேன்" என்றான்.

அதற்கு ஷியாம், "தனராஜ்! பூனை கடித்த கோழியை நீ தின்ன மாட்டாய்! என் கோழியைத் திருப்பிக் கொடு அல்லது நான் ராஜாவிடம் சென்று முறையிடுவேன்" என்றான்.

ராஜாவின் பெயரைக் கேட்டதும் பயந்து போனான் தனராஜ்!

ஏனெனில் அந்த ஊர் ராஜா ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் பார்க்காமல் நியாயமான தீர்ப்பு வழங்குபவர்!

அதனால், வீட்டுக்குள்ளிருந்து ஒரு வாத்தை எடுத்து வந்த அவன், "இந்தாப்பா ஷியாம்!

உன் கோழிக்குப் பதிலாக இந்த வாத்தை வைத்துக்கொள். தயவு செய்து ராஜாவிடம் போகாதே!" என்று கெஞ்சினான்.

ஷியாமும் வீண் சண்டை வேண்டாம் என்று வாத்தைப் பெற்றுக்கொண்டான்.

அதை கண்ணுங் கருத்துமாகத் தீனி இட்டு வளர்க்க, அதுவும் முட்டைகள் இடத் தொடங்கியது.

ஒருநாள் இரவு கனத்த மழை பெய்ய, ஒரு சாமியார் தனராஜின் வீட்டுக் கதவைத் தட்ட, அவரை தனராஜ் திட்டியனுப்பினான்.

அடுத்ததாக அவர் ஷியாமின் வீட்டுக் கதவைத் தட்ட, அவன் உடனே கதவைத் திறந்து அவரை குடிசையினுள்ளே அனுமதித்தான். மழையில் நனைந்திருந்த அவருக்கு மாற்றுடை தந்தான்.

பசியாக இருந்த அவருக்கு, அன்று வாத்து இட்டிருந்த முட்டைகளை வேக வைத்து உணவளித்தான்.

இதைக் கண்டு மகிழ்ந்த சாமியார், "மகனே! எனக்குப் புகலிடம் அளித்து உணவளித்த உனக்கு நன்றி! நீ தந்த முட்டைகள் சுவையாயிருந்தன.

இந்த முட்டைகளையிட்ட வாத்தைக் காட்டு!" என்றார்.

உடனே, அவன் வாத்தை எடுத்து அவரிடம் தர, அவர் வாத்தை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

"மகனே! கடவுள் உனக்கு அருள் புரிவார்!" என்று வாத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அப்போது மழை நின்று விட்டதால், சாமியார் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினார்.

மறுநாள் ஷியாமுக்கு ஒரு பேரதிசயம் காத்திருந்தது. அவனுடைய வாத்து தங்க முட்டையிட்டிருந்தது.

ஷியாமினால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. இது அந்த சாமியாரின் மகிமைதான் என்று புரிந்து கொண்டான்.

அதுமட்டுமல்ல! அந்த வாத்து தினமும் தங்க முட்டைகள் இட ஆரம்பித்தது. ஷியாமின் வறுமையும் நீங்கியது. செல்வம் குவியத் தொடங்கியது.

ஒருநாள், ஷியாமின் வாத்து தங்க முட்டையிடுவதை பக்கத்து வீட்டு தனராஜ் ஒளிந்திருந்து பார்த்துவிட்டான்.

அதனால் பொறாமை அடைந்து அந்த வாத்தை எப்படியாவது தான் கைப்பற்ற நினைத்தான்...........

(தொடரும்)

## 04.2015 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1521 - பெர்டினெனன்ட் மகலன் பிலிபபைன்சின் சேபு தீவை அடைந்தார்.
- 1541 - பிரான்சிஸ் சேவியர் போர்த்துக்கீச இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டு லிஸ்பன் நகரில் இருந்து புறப்பட்டார்.
- 1795 - பிரான்ஸ் மீற்றர் அளவு முறையை அறிமுகப் படுத்தியது.
- 1827 - ஆங்கிலேய வேதியியலாளர் ஜோன் வோக்கர் தான் கண்டுபிடித்த தீக்குச்சியை விற்பனைக்கு விட்டார்.
- 1906 - வேசுவியஸ் மலை தீ கக்கியதில் நேப்பில்சில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1906 - ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் மொரோக்கோ வந்தது.
- 1927 - முதலாவது தொலைதூர தொலைக்காட்சி சேவை வோஷிங்டன் டிசி, நியூயோர்க் நகரம் ஆகியவற்றிற்கிடையில் இடம்பெற்றது.
- 1928 - வால்ட் டிஸ்னி தனது புகழ்பெற்ற கார்ட்டூன் பாத்திரமான மிக்கி எலியின் படத்தை வரைந்தார்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி அல்பேனியாவை முற்றுகையிட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஆட்மிரால்ட்டி தீவுகளை ஜப்பான் கைப்பற்றியது.
- 1943 - யூதப் படுகொலைகள்: உக்ரேனில் டெரெபோவ்லியா என்ற இடத்தில் நாசிகள், 1,100 யூதர்களை அரை நிர்வாணமாக்கி நகர வீதி வழியே அழைத்துச் சென்று பின்னர் அவர்களைச் சுட்டுக்கொன்று புதைத்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: உலகின் மிகப்பெரும் போர்க்கப்பலான ஜப்பானின் யமாட்டோ ஓக்கினாவா அருகில் தென்கோ நடவடிக்கையின் போது அமெரிக்கப் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1946 - பிரான்சிடம் இருந்ததான சிரியாவின் விடுதலை அங்கீகரிக்கப்பட்டது.
- 1948 - உலக சுகாதார நிறுவனம் (WHO) ஐக்கிய நாடுகள் அவையால் தொடங்கப்பட்டது.
- 1963 - யூகோஸ்லாவியா சோசலிசக் குடியரசாகியது. மார்ஷல் டீட்டோ ஜனாதிபதியானார்.
- 1964 - ஐ.பி.எம் தனது System/360 ஐ அறிவித்தது.
- 1978 - நியூத்திரன் குண்டு தயாரிக்கும் திட்டத்தை ஐக்கிய அமெரிக்கா கைவிட்டது.
- 1983 - ஸ்ரோரி மஸ்கிரேவ், டொன் பீட்டர்சன் இருவரும் மீள் விண்ணோடத்தில் இருந்து விண்ணில் நடந்த முதல் வீரர்களானார்கள்.
- 1992 - ஸ்ருப்ஸ்கா குடியரசு விடுதலையை அறிவித்தது.
- 1994 - ருவாண்டாவின் கிகாலியில் டூட்சி இனத்தவர்களை அழிக்கும் படலம் ஆரம்பமானது.
- 2001 - மார்ஸ் ஒடிசி விண்கலம் ஏவப்பட்டது.
- 2003 - அமெரிக்கப் படைகள் பக்தாத் நகரைக் கைப்பற்றினர். சதாம் உசேனின் அரசு இரு நாட்களின் பின்னர் வீழ்ந்தது.

**பிறப்புகள்**

- 1889 - கப்ரியேலா மிஸ்ட்ரல், நோபல் பரிசு பெற்ற சிலி எழுத்தாளர் (இ. 1957)
- 1920 - ரவி சங்கர், சிதார் கலைஞர்
- 1935 - எஸ்.பி.முத்துராமன் தமிழ்த்திரைப்பட இயக்குனர்.

**இறப்புகள்**

- 1761 -தோமஸ் பேயிஸ், ஆங்கிலேய கணிதவியலாளர் (பி. 1702)
- 1947 - ஹென்றி ஃபோர்ட், மோட்டார் கம்பனி நிறுவனர் (இ. 1863)

**சிறப்பு நாள்**

- உலக சுகாதார தினம்

### உலக சுகாதார தினம்

உலக சுகாதார தினம் (World Health Day) என்பது உலக சுகாதார அமைப்பின் அனுசரணையுடன் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டில் இடம் பெற்ற உலக சுகாதார அமைப்பின் கூட்டம் ஒன்றில் ஒவ்வோர் ஆண்டும் 1950 இல் இருந்து உலக சுகாதார நாளாகக் கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அன்றிலிருந்து ஓர் முக்கியமான உலக சுகாதார அமைப்பின் சுகாதாரம் சம்பந்தமான கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

இந்த தகவல் அண்ணாமலைக்குத் தெரியவர, அதுவரை இருந்த பிடிவாதம், கோபம் விலகி, நண்பனை காப்பாற்ற ஓடி வருகிறார். எதிரிகளை துரத்தியடித்து நண்பனை மீட்கிறார். பழைய நட்பு மீண்டும் கைகோர்க்கிறது. நண்பனின் வீட்டை அவனுக்கே திருப்பிக் கொடுத்த அண்ணாமலை, மகளை நண்பன் வீட்டுக்கு மருமகளாக அனுப்பி வைக்கிறார்.

**காமெடி காட்சிகள்**

நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்தக் கதையில், ரஜினி - குஷ்புவின் ஆரம்ப சந்திப்புகளும், காமெடிக் கலாட்டாக்களும் ரசனையானவை. லேடீஸ் ஹாஸ்டலில் குளிக்கும்போது குஷ்புவை பார்த்துவிடும் ரஜினி, 'கடவுளே கடவுளே' என புலம்புவதும், அதன் பிறகு குஷ்புவை பார்க்கும் போதெல்லாம் 'கடவுளே கடவுளே' என சொல்வதும் திரை அரங்குகளை குலுங்கச் செய்த காமெடி.

சரத்பாபுவின் ஜோடியாக அந்நாளைய கதாநாயகி ரேகா நடித்திருந்தார். சரத்பாபுவின் மகனாக வந்தவர் நடிகர் கரண்.

அண்ணாமலை கதையின் மூலம் 'குதா காகர்ஸ்' என்ற இந்திப் படமாகும். அதைத்தழுவி வசனம் எழுதியவர் சண்முகசுந்தரம்.

படத்தின் வெற்றிக்கு, கவிஞர் வைரமுத்து எழுதி தேவா இசை அமைத்த பாடல்களும் முக்கிய காரணம்.

'வந்தேண்டா பால்காரன்', 'அண்ணாமலை அண்ணாமலை! ஆசை வெச்சேன் உண்ணாமலே', 'கொண்டையில் தாழம்பூ', 'வெற்றி நிச்சயம் - இது வேத சத்தியம்', 'ரெக்கை கட்டிப் பறக்குதம்மா அண்ணாமலை சைக்கிள்' போன்ற பாடல்கள் மூலை முடுக்கில் எல்லாம் எதிரொலித்தன.


முதலில் இந்தப்படத்தை வசந்த் டைரக்ட் செய்வார் என்று கூறப்பட்டது. பிறகு அந்த வாய்ப்பு சுரேஷ் கிருஷ்ணாவுக்கு கிடைத்தது. அவர் 'நட்சத்திர இயக்குனர்' அந்தஸ்தைப் பெற்றார்.

27-06-1992 இல் வெளியான இப்படம், 175 நாட்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது.

'ஸ்ரீராகவேந்திரர்'படம் சரியாக ஓடாததால், ரஜினிகாந்த் கோபம் அடைந்தார். 'உன்னைக் கும்பிடமாட்டேன்' என்று கூறி, ராகவேந்திரர் கோவிலுக்குப் போகாமல் இருந்தார்.

இந்தத் தகவலை, விழா ஒன்றில் பேசுகையில் ரஜினியே வெளியிட்டார்.

ரஜினி கூறியதாவது:-



ரஜினி, குஷ்பு-அண்ணாமலை

'சின்ன வயசிலே ராமகிருஷ்ண ஆசிரமத்தில் வேதம் உபநிஷத் எல்லாம் நான் படித்ததினால் 'அஹம்ப்ரும்மாஸ்மி' அதாவது 'ஆண்டவன் நமக்குள் இருக்கிறான்' என்பதை நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அதனுடைய அர்த்தம், விளக்கம் எல்லாம் அப்போ எனக்குத் தெரியாது. ஸோ, ராகவேந்திர சுவாமியை வீட்ல கும்பிடறாங்க. நானும கும்பிட்டேன்.

**கனவில் வந்தார**

ஒரு சமயம் ஸ்ரீராகவேந்திரர் என் கனவிலே வந்து அது தொடர்பாக நடந்த அதிசயங்களைப் பற்றி முன்னரே ஒருமுறை சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு நான் ராகவேந்திரர் சுவாமி மடத்திற்கெல்லாம் போவேன். வருடா வருடம் மந்த்ராலயம் போய் வந்தேன்.

அங்கே போனால் அந்தக்கூட்டம், டிஸ்டபன்ஸ் எல்லாம் எனக்கே என்னவோ போல் தோன்றியது.

எனவே, 'மந்த்ராலயம் போவானேன். இங்கேயே திருவல்லிக்கேணியில் ராகவேந்திரர் மடம் இருக்கிறதே, அங்குதான் போய் வருவோமே' என்று ஒவ்வொரு வியாழக்கிழமையும் போக ஆரம்பித்தேன். நான் ரெகுலராக வருகிறேன் என்றதால், அங்கேயும் கூட்டம் ஜாஸ்தியாகிவிட்டது.


அதற்கு பிறகு இன்னமும் சுருக்கிக்கொண்டு, 'திருவல்லிக்கேணிக்குப் போனால்தான் ராகவேந்திர சுவாமியைக் கும்பிடமுடியுமா, நம்ம பூஜை அறையிலேயே ராகவேந்திர சுவாமியை வைத்திருக்கிறோமே, இவர் வேறு, அவர் வேறா' என்று நினைத்து, வீட்டிலேயே கும்பிடலாம் என்று தீர்மானித்தேன். அப்போதிலிருந்து நான் கோவிலுக்குப் போறதில்லை.

**100 ஆவது படம்**

முதலில் இருந்தே எனக்கு ஒரு ஆசை. நான் இருபத்தைந்து படம் நடித்துக் கொண்டிருந்தபோது அந்த எண்ணம் எனக்குள் நன்றாக தோன்றிவிட்டது. என்னுடைய நூறாவது படத்தில் நான் ஸ்ரீராகவேந்திரராகத் தோன்ற வேண்டும் என்ற ஆசை வளர்ந்து கொண்டேயிருந்தது.

கன்னட நடிகர் ராஜ்குமார் ஏற்கனவே ராகவேந்திரர் படம் பண்ணியிருந்தார்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து– 110

...கொளத்தங் கரையில அன்னைக்கு அப்படி ஒரு சம்பவமாகிப்போகும்ன்னு கட்டையனும் நெனைக்கல; ஆடுகளும் நெனைக்கல.

களையெடுத்து முடிச்ச சோளக் காட்டப் பாத்துட்டு ஒத்தையில கரை வழியா வாரான் கட்டையன். வந்தவன் கரையிலயே ஒரு கிளுவம் புதரோரம் உக்காந்துட்டான் ஒண்ணுக்கிருக்க.

கரைவழியா வந்த செம்பிலி மந்தைகள அவன் கவனிக்கல பாவம்.

உக்காந்தவன் தன்னமறந்து தன் நாமம் கெட்டு அந்த இளம் சோகத்துல கரைஞ்சு கண்ண மூடி இருக்க; செம்பிலி ஆடுக ஒண்ணொண்ணாக் கடந்து போகுதுக அவன் முதுக ஒரசிக்கிட்டு; அவன் எந்திரிக்கல.

அவனுக்கு என்ன நம்பிக்கைன்னா சொக்கத்தேவன்பட்டி சுத்துவட்டாரத்துல தன்ன முன்னுக்கப் பாத்தாலும் பின்னுக்கப் பாத்தாலும் ஆடுமாடு முதற்கொண்டு அத்தன சவராசிகளுக்கும் அடையாளம் தெரியும். தான் ஒண்ணுக்கிருக்கிறதப் பாத்தா ஆனையே ஒதுங்கிப்போகுமே, ஆடா ஒதுங்கிப்போகாது? கட்டையன் நம்பிக்கை வீண் போகல.



அவனக் கண்டு ஏதோ ஒரு கெட்ட ஆவி உக்காந்திருக்குன்னு எல்லா ஆடுகளும் ஒதுக்கித்தான் போச்சுக ஒரு ஓரமா.

மந்தையில மையத்துல வருது பூலித்தேவன். அது கொம்பு நீளம்; உடம்பு பெரிசு; கரை வேற சிறுசு. அது கொஞ்சம் ஒதுங்கிப் போனாலும் கொளத்துல விழுந்திரும். அதனால சித்தம் போக்கு சிவம் போக்குன்னு தன் போக்குல போகுது. அப்பத்தான் அந்தக் கதையாகிப்போச்சு.

கட்டையன அது கடக்க... அந்த நேரம் பாத்து அது மூக்குமேல ஒரு முள்ளு ஒரச.... அந்த அதிர்ச்சியில அது கொம்ப அங்கிட்டும் இங்கிட்டும் ஒரு ஆட்டு ஆட்ட.... அது அவன் முதுகுல குத்திச் சட்டையக் கிழிக்க... அவன் என்னமோ ஏதோன்னு எந்திருச்சுத் திரும்ப... அப்பக் கடந்த போன கனத்த வகுறு அவன எம்பி ஒரு தள்ளுத் தள்ள.... நெல குலஞ்சு பள்ளத்துல சரிஞ்சு உருண்டு கத்தாழம் பொதர் ஓரமா காயாத நரகல் மேல விழுந்து போனான் கட்டையன். சீ! வேட்டியெல்லாம் ஆகிப் போச்சே வெளிக்கிருந்த பொருள்ன்னு அருவருப்பாகி உருண்டு பெரண்டு தடால்னு எந்திரிக்க இடுப்புல குத்தி இழுக்குது இண்டம் புதரு.

முள்ளப் புடுங்கி எறிஞ்சிட்டு மூக்குவெடைக்கிற கோபத்துல கரை மேல கண்ணச் செலுத்திப் பாக்குறான் கட்டையன், இந்தச் சம்பவத்துக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்ல சாமின்னு போயிக்கிட்டேயிருக்கு பூலித்தேவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு பெற்றிடுவீர் ஆனந்த வாழ்க்கை வாழ்ந்திடுவீர்!

புற்றுநோயானது, ஒரு முக்கிய உலக் சுகாதாரப் பிரச்சினையாகவும், அதிகரித்துவரும் புற்றுநோயின் எண்ணிக்கையானது, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளல் முக்கிய பிரச்சினையாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது (வரைபடம்1). "உலக சுகாதார அறிக்கை 2001" உள்ளபடி, ஆண்டு தோறும், 10 மில்லியன் புதிய புற்று நோயாளிகள் உலகம் முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றனர். இந்த வேகமாக விரிவடைந்துவரும் புற்று நோய் அதிகரிப்பிற்கு, பின்வருவன முக்கிய கார ணிகளாக காணப்படுகின்றன. அவையாவன,

மாறுபாடடைந்துவரும் குடிசனப் பரம்பலினால், உயிர்வாழும் முதியவர்கள் விகிதம் அதிகரித்து வருதல்.

உயர் கலோரிப் பெறுமானமுள்ள உணவு வகைகளை உண்ணும் பழக்கம் அதிகரித்தல்.

உடல் உழைப்பு செயற்பாடு இல்லாமை.

உடற்பயிற்சியின்மை.


மேற்கத்தேய வாழ்க்கைப் பாணியை ஒத்த, உடல் உழைப்பு தேவைப்படாத வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும்மக்கள தொகை அதிகரித்தல். சமூக, பொருளாதார மாற்றங்கள்காரணமாக அதிகமாக உடல எடை மற்றும் உடற்பருமன்போன்ற காரணங்கள் வழிவகுத்தன. நடந்துவரும் உலகமயமாக்கலின் விளைவாக, புகையிலைப் பாவனை அதிகரித்தல்.

மது அருந்துதல் அதிகரித்தல.

கொழுப்பு உணவை அதிகளவில் உள்ளெடுத்தல் என்பனவும் அதிகரித்துள்ளன.

மேற்குறிப்பிட்ட காரணிகள் மற்றைய தொற்றா நோய்களின் அதிகரிப்பிற்கும் பொதுவானதாகும். உலகமயமாக்கலின் விளைவாக, 2008 ஆம் ஆண்டில், 12.7 மில்லியனாகக் காணப்பட்ட புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை, 2030 ஆம் ஆண்டளவில் 22.2 மில்லியனாக உயர்வடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. புதிய புற்றுநோய் நிகழ்வுகளில், 78 வீத சுற்றி எழுச்சி மாற்றங்கள், நடுத்தர மனித வளர்ச்சிக் குறியீட்டைக (HDI) கொண்ட இலங்கை போன்ற நாடுகளிலேயே ஏற்படும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது (Bray et al., 2012).

உலகளாவிய ரீதியில், இறப்பை ஏற்படுத்தும் காரணிகளில் புற்றுநோய் ஒரு முக்கியமான தாக உள்ளது. 2008 ஆம் ஆண்டில், 7.6 மில்லியன் இறப்புகள் (அண்ணளவாக மொத்த இறப்புக்களில் 13 வதம்) ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது (Ferlay etal., 2011). 2008 ஆம் ஆண்டில், புற்றுநோயினால் ஏற்பட்ட அனைத்து மரணங்களில, 72 வீதமான மரணங்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளிலேயே (LMICs) ஏற்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டில், காசநோய், எச்.ஐ.வி (HIV) மற்றும் மலேரியா போன்றவற்றால் ஏற்பட்ட ஒருங்கிணைந்த (வரைபடம்:2) மரணங்களைவிட அதிகளவானோர், புற்றுநோயினால் மட்டுமே, உலகம் முழுவதும் கொல்லப்பட்டனர் (Ferlay etal., 2011). மேற்படி மதிப்பீட்டின்படி, புற்றுநோயினால், 2030 ஆம் ஆண்டளவில், உலகளவில் ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து 12 மில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




வரைபடம் 1 : உலகளாவிய ரீதியில் புற்றுநோய் ஏற்படும் விகிதம் ( IARC, 2003 ).

"புற்றுநோய்க்கு எதிராக சர்வதேச ஒன்றியம்" (UICC) உருவாக்கிய, "உலகப் புற்றுநோய்ப் பிரகடனம்" என்ற ஆவணமானது, 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற, உலகப் புற்றுநோய் உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 2010 ஆம் ஆண்டில், "உலகப் புற்றுநோய் காங்கிரஸ்" மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய உலகளாவிய இலக்குகள் கண்டறியப்பட்டு "உலகப் புற்றுநோய்ப் பிரகடனம்" மூலம், திட்ட செயலுருவாக்கத்திற்கான உடனடி அழைப்பும் விடுக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்த, பின்வரும் செயற்பாடுகள் முக்கியமாக அமைகின்றன. அவையாவன,

1.தேசிய சுகாதாரக் கொள்கையை உருவாக்குதல்,


2.புற்றுநோய்கள் வராது தடுத்தல்,

3.புற்றுநோயை மிக ஆரம்ப நிலையில் கண்டறிதல்,

4.சிகிச்சையளித்தலில் முன்னுரிமை வழங்கல்,

5.புற்றுநோய் தொடர்பான சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல்.

இந்த நடவடிக்கைகள் மூலம், எல்லோருக்கும் சமவாய்ப்பு அணுகுமுறையை உறுதி செய்வதோடு சிறந்த பராமரிப்பிற்குரிய வழிவகைகளைத் திறப்பதற்கூடாகவும் 2020ஆம் ஆண்டிற்கென்று அடையாளம் காணப்பட்ட இலக்குகளை நோக்கிப் பயணிக்கலாம்.





வரைபடம் 2 : 2002ஆம் ஆண்டில், உலக இறப்பு நிலைகள் ( IARC, 2003

இலங்கையிலும்கூட, அதிகளவு நோய்ப் பரம்பலை ஏற்படுத்தும் காரணியாகப் புற்றுநோயே உள்ளது. 2006 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற, சமீபத்திய புற்றுநோய்ப் பதிவுப் புள்ளி விபரங்களின்படி, அரசாங்கத்தின் புற்றுநோய்ச் சிகிச்சை மையங்களில், மொத்தமாக 16.511 புதிதாகக் கண்டறியப்பட்ட புற்றுநோயாளிகள் (நோய் நிகழ்வு விகிதம் 81.6/100,000 பேருக்கு) பதிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. 1985ஆம் ஆண்டில், வயது அடிப்படையில் தரப்படுத்தப் பட்ட புற்றுநோய் விகிதம் (சனத் தொகை, 100,000 பேருக்கு) 37.6 வீதமாக இருந்தது. ஆனால், 2008 ஆம் ஆண்டு, அடிப்படையில், தரப் படுத்தப்பட்ட புற்றுநோய் விகிதம் (சனத்தொகை, 100,000 பேருக்கு) 86.4 வீதமாக இருந்தது. இதே நேரம், யாழ்ப்பாணம் மற்றும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலைகளில், கடந்த ஆண்டு புதிதாகப் பதியப்பட்ட மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 1050 ஆக உள்ளது. இது உண்மையில் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுமே. மகரகம மற்றும் கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்று சிகிச்சை பெறுவோர், தனியார் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையையும் கூட்டுகின்ற போது உண்மையான நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தையும் தாண்டிவிடும்.

(வரைபடம்:3). இது இலங்கையில், புற்றுநோய் நிகழ்தகவு அதிர்வெண் அதிகரிக்கும் போக்கைக் காட்டுகின்றது. புற்றுநோயை மிக ஆரம்பத்திலேயே கண்டறிதல் மற்றும் வழங்கப்படும் சிகிச்சை போன்றன இவ் அதிகரிப்பிற்குக் காரணமாக இருந்தாலும், வாழ்க்கைப் பாணி மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட அதிகரிப்பே, இலங்கையில் புற்றுநோய்களின் அதிகரிப்பிற்கு மிக முக்கிய கணிசமாக பங்களிப்பை வழங்குவதாகத் தெரிய வந்துள்ளது. எது எப்படியிருப்பினும், மற்றைய நாடுகளில் விடப்பட்ட தவறுகளை தவிர்ப்பதன் மூலமும், சரியான நேரத்தில் எடுக்கப்படும் கணிசமான உணவுக் கட்டுப்பாட்டுப் பழக்க வழக்கம் மற்றும் வாழ்க்கை பாணியில் மாற்றங்கள் ஏற்பட, உரிய நடவடிக்கை எடுப்பதன்மூலம், இலங்கைவாழ் பொது மக்களிடையே அதிகரித்துவரும் புற்றுநோயின் ஆபத்தைக் குறைக்க, பகுதியளவு பங்களிப்பு வழங்க முடியும் என்கின்ற நல்ல சமிக்ஞையும் தற்போது தென்படத் தொடங்கியுள்ளது. இதன் மூலம், புற்றுநோய் விகிதங்களை எதிர்காலத்தில் குறைக்க முடியும். அப்படியலலாவிடின், 2030 ஆம் ஆண்டளவில், உத்தேசிக்கப்பட்ட புற்றுநோய் அதிகரிப்புச் சுமை, உண்மையாக மாறுவதைத் தவிர்க்க முடியாது. அதேநேரம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் நிலைமை வேறுவிதமாக உள்ளது. புற்று நோய்கள பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே குறைவாக இருப்ப தால், புற்று நோய் பற்றிய அறிகு றிகள் தோன் றினாலும் அதை உடனடியாக சென்று காட்டாமல் பின்னர் நோய் நன்றாக முற்றிய பின்னர் (stage 3, stage4). சிகிச் சைக்கு வருகின்ற போது சிகி ச்சை வெற்றியளிப்பதில்லை. நோய் ஆரம்ப நிலையில் வருகின்ற நோயாளிகள் கூட, சிகிச்சைக்காக உங்களுக்கு ஊசி மருந்து ஏற்றவேண்டும், கரண்ட் அல்லது லைட் பிடிக்க வேண்டும் என்று சொல்கின்ற போது பயத் தினால் சிகிச்சைக்கு வராமலி ருந்து ஒன்றில் மரணிக் கின்றனர் அல்லது நோய் மிக முற்றிய நிலையில் சிகிச்சையை நாடி வருகின்றனர். நன்றாக முற்றிய நிலையிலும் சிகிச்சை வெற்றியளிப்பதில்லை. இந் நோயாளர்களுக்கு ஆறுதலான விடயம் என்னவெனில், நோய் தணிப்புச் சிகிச்சை(Palliative Care) எனப்படும் சிகிச்சை முறையானது தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் புற்றுநோய்ச சிகிச்சை நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவது நோயாளிகளுக்கு ஆறுதலளிக்கும் விடயமாகும். நோய் முற்றிய நிலையிலும் நோயின் வீரியத்தைத் தவிர்த்து ஓரளவுக்கு தரமான வாழ்க்கை வாழமுடியும்.

(தொடரும்...)




வரைபடம்3 :இலங்கையின் தரப்படுத்தப்பட்ட புற்றுநோய் விகிதங்கள்.

வைத்திய நிபுணர்
**கவிதா இந்திரநாத்**
விசேட புற்றுநோய் வைத்திய நிபுணர், பாதை புற்று நோய் வைத்தியசாலை தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19இற்கு ஆதரவு கிடைக்காவிட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படுமாம்!

(கொழும்பு)

**19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் நாடாளுமன்றை கலைபபதனைத் தவிர வேறு மாற்று வழிகிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.**

19 ஆம் திருத்தச் சட்டததை அமுல்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முழு அளவில் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் குறித்த 19ஆம் திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளினால் பரிந்துரை செய்யப்பட்ட சில திருத்தங்கள் 19 ஆம் திருத்தச் சட்டத்தில் இணைத்துக் கொளளப்படவுள்ளன.

அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்ய மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

## ஐ.தே.க.மீண்டும் எச்சரிக்கை

அந்த ஆணையின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்து வருகின்றது என கபீர் ஹாசிம் சிங்கள ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பிரமோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு- மடத்து வெளி (வயலூர்) அருள்மிகு ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் ஜயவருட பிரமோற்சவ விஞ்ஞாபனம் நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் இடம்பெறும். (இ

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 60 | 40 | 50 |
| தக்காளி | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 70 | 50 | 30 | 40 |
| கரட் | 180 | 140 | 110 | 120 | 100 | 100 |
| பூசணி | 50 | 40 | 50 | 40 | 40 | 30 |
| புடோல் | 50 | 40 | 40 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 70 | 80 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 150 | 100 | 100 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 50 | 60 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 60 | 70 | 60 | 60 | 50 | 70 |
| லீக்ஸ் | 200 | 150 | 150 | 160 | 130-150 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 60 | 40 | 50 |
| கறிமிளகாய் | 200 | 100 | 130 | 80 | 50-90 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 80 | 100 | 120 | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 30 | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 | 30-40 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-80 | 60 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 80 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 120 | 120 | — | — | — | 80 |
| முள்ளங்கி | 40 | 20 | 40 | 60 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# உதயங்கவின் இராஜதந்திர கடவுச்சீட்டு இரத்து

(கொழும்பு)

ரஷ்யாவுக்கு சார்பான கிழக்கு உக்ரைன் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்தார் என்று கூறப்படும் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச்சீட்டு, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

உதயங்க வீரதுங்கவினால் பயங்கரவாதிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்தே இலங்கை அரசாங்கத்தினால் மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பாகிஸ்தானிலிருந்து திரும்பியதன் பின்னர் எடுக்கப்படவிருப்பதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக பதில் வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

உதயங்க வீரதுங்க தற்போது எங்கு இருக்கின்றார் என்பதை கண்டுபிடிக்க முடியாதிருப்பதாகவும் தேவையேற்பட்டால், சர்வதேச பொலிஸாரின் உதவியும் பெறப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். உதயங்க வீரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினர். ஸ்ரீலங்கன் விமான சேவையில் இடம்பெற்ற மோசடிகள், ரஷ்ய தூதரகத்தில் பணியாற்றிய செயலாளர் ஒருவா கொலை செய்யப்பட்டமை, உக்ரைன் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்தமை தொடர்பில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 334

சுஜே செல்வா





திலீப் குமார்





சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




கஜன் கஜமுகன்




கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழி தவறிய சீனப்பயணம்!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்தமாத இறுதியில் சீனாவுக்கு மேற்கொண்ட பயணம், வெற்றிகரமாக அமைந்திருந்தது என்று வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது. ஆனால், அது எந்தவகையில், நாட்டுக்குப் பயனுள்ள விதத்தில் அமைந்திருந்தது என்பது கேள்விக்குரிய விடயம்தான.

ஏனென்றால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கு மேற்கொண்ட பயணம், முதலீடுகளை ஈர்த்தல், இந்தியாவுடனான உறவுகளை சமநிலைப்படுத்தி, சீனாவுடனான உறவுகளை உறுதிப்படுத்தல் என்பனவற்றுக்கும் அப்பால் சீனாவிடம் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்களையும் குறைக்கின்ற நோக்கத்தைக் கொண்டிருந்தது.

இந்த விடயங்களில் இலங்கைக்கு எந்தளவுக்கு சாதகமான நிலை சீனாவில் காணப்பட்டது என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். ஆனால், ஒருவகையில் இந்தப் பயணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கைகொடுத்திருக்கிறது.

கோடரியால் வெட்டப்பட்டு கொல்லப்பட்ட தனது இளைய சகோதரனின் இறுதிச்சடங்கில் பங்கேற்காமல் தவிர்ப்பதற்கு, சீனப் பயணம் அவருக்கு உதவியிருக்கிறது. தனது சகோதரரான பிரியந்த சிறிசேன மீது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி கொண்டிருந்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த சூழலில், அவர் உள்நாட்டில் இருந்திருந்தால், நிச்சயமாக இறுதிச சடங்கில் கலந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

சீனாவிலிருந்த காரணத்தைக் காட்டி அவர், இறுதிச் சடங்கில் பங்கேற்காமல் நழுவிக் கொண்டார். சீனப் பயணம், கடந்த மாதம் 29 ஆம் திகதியுடன் நிறைவடைந்த போதிலும், 31 ஆம் திகதி அதிகாலையில் தான் அவர் நாடு திரும்பினார். சில வேளைகளில் மஹிந்த ராஜபக்ஷவும் இவ்வாறு அரசு முறைப் பயணத்துக்குப் பின்னர், தனிப்பட்ட பயணத்தை நீடிப்பதுண்டு.

அதே உத்தியைக் கையாண்டு தனது சகோதரனின் இறுதிச்சடங்கில் பங்கேற்காமல் நழுவிக் கொண்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இது அவருக்கு வாய்த்த நல்லதொரு சந்தர்ப்பம். இதுதவிர, சீனப் பயணத்தின் மூலம், அவர் பெரியளவில் நன்மைகளை அடைந்துள்ளார் என்று கூறப்படுவதற்கில்லை. ஏனென்றால், சீனாவுக்கான பயணத்தை அவர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பல பிரச்சினைகள் காணப்பட்டன.

அதில் மூன்று முக்கியமானவை. 1. கொழும்புத் துறைமுக நகரத் திட்ட விவகாரம். 2. சீனாவின் கடன் திட்டங்களை மீளாய்வு செய்தல். 3. இந்தியாவுடனும், சீனாவுடனும் உறவுகளை சமநிலைப்படுத்தல். இந்த மூன்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்பாக இருந்த முக்கியமான சவால்களாகவே கருதப்பட்டன.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்திய அரசாங்கம், அதற்காக வழங்கப்பட்ட அனுமதிகளை மீளாய்வு செய்வதில் உறுதியாக உள்ளது. இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் அவ்வப்போது, முன்னுக்குப் பின்னாக நடந்து கொண்டாலும், இதுவரை அந்தத் திட்டத்தை மீள ஆரம்பிக்க அனுமதி வழங்கவில்லை.

சீனாவோ இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவே உள்ளது. ஆனால், இலங்கை அரசாங்கமோ, சுற்றுச்சூழல் காரணங்கள உள்ளிட்டவற்றை முன்னிறுத்தி இதனைத் தடுத்து விடுவதில் ஆர்வம் காட்டுகிறது.

சீனத் தரப்பு, இது முன்னைய அரசாங்கத்துடன் செய்யப்பட்ட உடன்பாடு என்றும், இதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி, இந்த உடன்பாட்டை தொடர்ந்து முன்னெடுப்பது தற்போதைய அரசாங்கத்தின் கடமை என்றும் வலியுறுத்தி வருகிறது. இந்த விவகாரம் குறித்து [illegible] பேசப்படும் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சீனப் பயணத்துக்கு முன்னரே எதிர்வு கூறப்பட்டது.

சீன ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியு, ஜியான்சோ, துறைமுக நகரத் திட்டத்தை தொடர இரு தலைவர்களும் விருப்பம் வெளியிட்டதாகவும், விரைவில் இதனை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாகவும் கூறியிருந்தார்.

ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட இந்த செய்தியை பின்னர், இலங்கை அரசாங்கம் நிராகரித்தது. அப்படி எந்த இணக்கப்பாடும் ஏற்படவோ வாக்குறுதி கொடுக்கப்படவோ இல்லை என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி, கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் குறித்து பேசப்படவேயில்லை என்றும் அவர் கூறியிருந்தார். கடந்த புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இதனையே குறிப்பிட்டார். சீன ஜனாதிபதியோ அவரது குழுவினரோ இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பவில்லை என்றும், ஆனாலும், அது குறித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கமளித்திருந்தார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

சீனாவைப் பொறுத்தவரையில் இந்த திட்டம் மிகமுக்கியமானது. ஆனாலும் அது பற்றிப் பேசப்படவேயில்லை என்று இலங்கை கூறுவது ஆச்சரியமளிக்கிறது. அதேவேளை, இருதரப்பும் திட்டத்தை தொடர விருப்பம் தெரிவித்ததாக சீனத் தரப்பு கூறியுள்ளது. இவையெல்லாம் குழப்பமான விடயங்களாகவே உள்ளன.

இந்த திட்டத்தை மீளாய்வு செய்யும் அரசாங்கம், சீன நிறுவனத்திடம் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த அனுமதிகள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்க இரண்டு வார கால அவகாசம் கொடுத்திருந்தது. ஆனால், அந்தக் கால அவகாசத்துக்குள் சீன நிறுவனம், உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறிவிட்டதாக, சீனாவில் இருந்த போதே, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, "சவுத் சைனா மோர்னிங் போஸ்ட்" நாளிதழிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீன வானொலிக்கு அளித்த பேட்டியில், இலங்கையின் நிலப்பரப்பை எந்தவொரு நாட்டுக்கும் விட்டுத்தர முடியாது என்றும், இந்த திட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். ஆக, இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாடடை வலியுறுத்துவதிலும், சீன அரசாங்கம் தனது நலனைப் பேணுவதிலும்தான், கவனம் செலுத்தியுள்ளனவே தவிர இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்குத் தவறியுள்ளன என்பதே உண்மை.

அடுத்து, இலங்கைக்கு சீனா வழங்கியுள்ள பல்வேறு கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைப்பது குறித்துப் பேச, புதிய அரசாங்கம் ஆர்வம் கொண்டிருந்தது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், சீனாவிடம் பெற்ற கடன்களுக்கு அதிக வட்டி செலுத்தப்படுவதாக தற்போதைய அரசாங்கம் கருதுகிறது. சில கடன்கள் 6 அல்லது 7 வீத வட்டிக்குப் பெறப்பட்டுள்ளன.

இவை மிக அதிகம் என்றும், இந்தக் கடன் திட்டங்களை மீளாய்வு செய்து வட்டியைக் குறைப்பது குறித்து பேச்சு நடத்தப்படும் என்றும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்குச் சென்றிருந்த போதே கூறியிருந்தார். இதுகுறித்துப் பேசுவதற்கு, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விரைவில் சீனாவுக்கு வருவார் என்று அவர் கூறிய போதே, அதெல்லாம் முடியாது என்று சீனா கூறியிருந்தது.

கடன்களுக்கான வட்டியை மீளாய்வு செய்வது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பயணத்தின் முக்கியமான நோககம். ஆனால், அவரது பயணத்துக்கு முன்னரே, இலங்கைக்குக் கடன் வழங்கிய சீனாவின் முக்கியமான இரண்டு வங்கிகளில் ஒன்றான, சீன அபிவிருத்தி வங்கியின் பிரதிப் பணிப்பாளர், கடன்களை மீளாய்வு செய்ய முடியாது என்று கூறியிருந்தார்.

ஏற்கனவே இதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருந்தது என்றும், இதற்குத் தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டன என்றும் சுட்டிக்காட்டியிருந்த அவர், இனி மீளாய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். தமது வட்டி வீதம், 5.9 வீதமே என்றும், ஆனால் இலங்கை அரசாங்கம் 6, 7 வீத வட்டிக்கு பிணை முறிகளை வழங்கியுள்ளதாகவும் நியாயப்படுத்தியுள்ளார்.

இந்தநிலையில், சீனா சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விவகாரம் குறித்தும் பேசவில்லை. இதுகுறித்து கருத்து வெளியிட்ட சீன வெளிவிவகார உதவி அமைச்சர் லியூ ஜியான்சோ, இரண்டு நாட்டுத் தலைவர்களும், எந்தவொரு கடன்கள் தொடர்பான வட்டி வீதம் குறித்த முக்கியமான மீள்பேச்சுக்களை நடத்தும் அளவுக்குச் செல்லவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அரசாங்கத் தரப்பு இந்த விவகாரம் குறித்து இன்னமும் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவும் பீஜிங் சென்றிருந்தார். என்றாலும், இந்த விடயத்திலும் இலங்கை அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

இந்த இரண்டு விவகாரங்களிலும், இண்க்கப்பாடு எட்டப்படாத போதிலும், 2000 இலங்கை விஞ்ஞானிகளுக்கு பயிற்சி அளித்தல், பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தல், வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோய் பாதிப்புக் குறித்து ஆய்வு செய்வதற்கு உதவவும், அத்தகைய நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனையை உருவாக்கவும் சீனா உதவ முன்வந்துள்ளது.

மேலும், எந்த நிபந்தனையும் விதிக்காமல், 1 பில்லியன் ரூபா மானியங்களை வழங்க சீனா முன்வந்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டிருந்தார். அதேவேளை, மூன்றாவது விடயமான, இந்தியாவுடனான உறவுகளை சமப்படுத்திக் கொள்வதிலும், இலங்கை பெரிய முன்னேற்றங்களை எட்டவில்லை. கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் மற்றும் தனது நீர்மூழ்கிகளுக்கு கதவடைப்புச் செய்தது எல்லாமே இந்தியாவின் வேலைதான் என்று சீனா சந்தேகிக்கிறது.

எனவே, இந்தியாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவுக்கு இணையாக தானும் இருப்பதாக சீனாவினால் நம்ப முடியவில்லை. என்றாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த சீனத் தலைவர்கள் அனைவருமே, சீனாவுடனான உறவுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருந்தனர்.

முக்கியமாக, சீன நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்று, திரும்பத் திரும்ப சீன ஜனாதிபதி மற்றும் சீனப் பிரதமரால் வலியுறுத்தப்பட்டதை சாதாரண விடயமாக கொள்ள முடியாது. இப்படியான நிலையில், தனது சீனப் பயணத்தின் மூன்று முக்கிய இலக்குகளையும் எட்டுவதில் மைத்திரிபால சிறிசேனவுக்கு தோல்வியே ஏற்பட்டுள்ளது.

இந்த மூன்று விவகாரங்களும் தீர்க்கப்படாமல் சீனாவுடனான உறவுகள் ஒருபோதும் சுமூகமான நிலைக்குத் திரும்ப முடியாது. சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கத்தைக் கைக்குள் போட்டுக்கொள்ள விரும்பினாலும், தனது வர்த்தக நலன்களை இழந்து அந்த நிலையை அடைவதற்குத் தயாராக இல்லை. இதுதான், சீன-இலங்கை உறவுகளை புதுப்பிப்பதற்குத் தடையாக இருக்கிறது. இந்த தடையை, ஏதாவதொரு பக்கம் அகற்ற முன்வராமல், சீன -இலங்கை உறவுகள் மீண்டும் பழைய நிலைக்குச் செல்வது கடினமானதே.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு எதிர்காலத்தினை நோக்கி அவதானம் செலுத்த வேண்டும்

## மகிந்த கூறுகிறார்



(கொழும்பு)

**இறந்தகாலம் தொடர்பில் பொய்ப்பிரசாரங்களை முன்வைத்து, காலம் கடத்தாது, தற்போதைய அரசாங்கம் எதிர்காலத்தை நோக்கி அவதானம் செலுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

முன்னர் இருந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுக்கின்றது.

இதன்காரணமாக, மக்களுக்கிடையே சகல அபிவிருத்தி தொடர்பிலும் அவநம்பிக்கை மற்றும் சந்தேகம் ஏற்பட வாய்புள்ளதாக முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

தமது ஊடக பிரிவு ஊடாக மூன்று பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பெருந்தெருக்கள் அமைச்சர் கபீர் ஹாசீம் அண்மையில் வெளியிட்ட கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையிலே அவற்றை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் ஆட்சிகாலப்பகுதியினுள், பெருந்தெருக்கள் செயற்றிட்டத்திற்காக உரிய அளவிற்கு மேலதிகமாக அதிக நிதி ஒதுக்கீட்டை செய்து ஊழல் மோசடி மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் கபீர் ஹாசீம் குற்றம் சுமத்தியிருந்தார்.

பெருந்தெருக்களை பொறுத்தவரையில், ஒவ்வொரு செயற்றிட்டமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தெரு செயற்றிட்டமானது, சீனி, பருப்பு போன்று நிர்ணய விலைக்குட்பட்ட உற்பத்தி பொருட்கள் அல்லவென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காடான பிரதேசம், மேட்டு நிலம், கருங்கல் பாறை, பாலம், காணிகளை கைப்பற்றி கொள்ளல் போனற விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதிகளில் கூடுதலான அல்லது குறைந்தளவிலான செலவனங்கள் ஏற்பட வாயப்புள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுதந்திர கட்சியின் ஒழுக்க விதிகளை மீறும் உறுப்பினர்கள் மீது விரைவில் நடவடிக்கை

## சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்க விதிகளை மீறும் உறுப்பினர்கள் பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்க விதிகளை மீறும் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விரைவில் தண்டனை வழங்கவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்

அவ்வாறு தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னர் விருப்பமென்றால் எங்களுடன் கலந்துரையாடி, பின்னர் தொடர்ந்து எங்களுடன் செயற்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் பெற்றுக்கொள்ளலாம்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அனைவரும் தவறு செய்தவர்கள் தான், அதில் குறைந்த தவறு செய்தவர்கள் எங்களுடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

அவ்வாறு இணைந்துள்ளவர்கள் அரசியலில் மாற்றம் வேண்டுமென்பதை புரிந்து கொண்டுள்ளார்கள். இதனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிளவுபடவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஜனாதிபதி மன்னிப்பு வழங்கிய போதிலும் மட்டக்களப்பு யுவதி விடுவிக்கப்படவில்லை

(கொழும்பு)

சிகிரியா சுவரில் கிறுக்கிய மட்டக்களப்பு யுவதிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியிருந்த போதிலும், இன்னமும் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி சிகிரியாவிற்கு சுற்றுலா சென்ற சின்னத்தம்பி உதயஸ்ரீ என்ற யுவதி, சிகிரியா கண்ணாடிச் சுவரில் கிறுக்கிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரணை செய்த நீதவான், குறித்த யுவதிக்கு இரண்டு ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்திருந்தார்.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைக்கு அமைய அண்மையில் குறித்த யுவதிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியிருந்தார்.

எனினும், ஜனாதிபதியின் உத்தரவு இன்னமும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கிடைக்கபெறாத காரணத்தினால் நேற்று முன்தினம் வரையில் குறித்த யுவதி விடுதலை செய்யப்படவில்லை.

தொடர்ந்தும் குறித்த யுவதி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ யுவதியை விடுதலை செய்யுமாறு உத்தரவு கிடைக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# ஏப்ரல் 15 ஆம் திகதி வரை சூரியன் உச்சம் கொடுக்கும்

ஏப்ரல் 15 ஆம் திகதி வரையும் சூரியன் இலங்கைக்கு மேலாக நேர்கோட்டில் பயணம் செய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் கொக்கல நாக்குலகமுவ மற்றும் தெனிபிட்டிய ஆகிய பிரதேசங்களில் நண்பகல் 12.13 மணியளவில் சூரியன் நேர் கோட்டில் பயணிப்பதை அவதானிக்க முடியும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் நாட்டில் மழைவீழ்ச்சி குறைந்து வெப்பநிலை அதிகரித்திருக்கும்என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## மன உளைச்சலைத் தவிர்ப்பது எப்படி?

இப்போதெல்லாம் நிறையப் பேர் மன உளைச்சலாலும் மன அழுத்தத்தாலும் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கையிலே ஒரு பிடிப்பு இல்லாமற் போய்விடுகிறது. மனம் தளர்ந்து, உடல் நலிந்து, இந்த உலகில் வாழ்வதே அவர்களுக்கு ஒரு பெருஞ்சுமையாகிவிடுகிறது.

இந்த மன உளைச்சல் ஏன்? இப்படிப்பட்ட மன உளைச்சல் வரும்போது அதை எப்படிச் சமாளிப்பது? இது வராமல் தடுத்துக் கொள்ளமுடியுமா? என்று பார்க்கிறார்கள். இன்று வாழ்க்கை முறை மாறிவிட்டது. போட்டியும் பொறாமையும் நிறைந்த உலகம் இது. சரியானபடி வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியாமல் பலர் இங்கே பின்தங்கி விடுகிறார்கள். முன்னுக்கு வரமுடியாமல் அவதிப்படுகிறார்கள். நிம்மதியிழந்து தவிக்கிறார்கள். சிறுசிறு தோல்விகள், ஏமாற்றங்களைக்கூட அவர்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை.

நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் மனஉளைச்சல் வரும்போது அதை எதிர்கொண்டு நமக்குச் சாதகமான விதத்திலே அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதுதான். இந்த வயதினருக்குத்தான் மன உளைச்சல் வரும் என்றில்லை. வயது முதிர்ந்தவர்கள் மட்டுமன்றி இளைஞர்களுக்கும்கூட அது வரலாம்.

ஆண், பெண் என்கிற வித்தியாசம் இல்லாமல் மனஉளைச்சல் வரலாம். கல்வி, பதவி, பணபலம், அந்தஸ்து இவையும் மன அழுத்தத்திற்கு காரணம் ஆகலாம். அதையும் எதிர் கொள்ளலாம். வாய்ப்புக்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரித்தான் வருகின்றன. அதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவதும் தாழ்ந்து போவதும் அவரவர் கைகளில்தான் இருக்கிறது.

பதற்றம், அவசரம், மனஉளைச்சல் ஏதாவது நமக்கு ஏற்படுமா என்ற பயம் (Anxiety), பாதுகாப்பின்மை (Security Feeling) இவையெல்லாம்கூட அனைவருக்கும் பொதுவான பிரச்சினைகள்தான். ஆனால் இவற்றை சமாளிக்கத் தெரிந்தாற்போதும். மன உளைச்சல் ஏற்படாமல் நம்மால் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

கிரிக்கெட்டில் ஒரு சச்சின், ஓட்டத்தில் ஒரு பி.டி.உசா, செஸ்ஸில் விஸ்வநாதன் ஆனந்த், சமீபத்தில் மகேந்திரசிங் டோனி இவர்கள் எல்லோரும் சாதனையாளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள். டாடா, மிட்டல், அம்பானி போன்றவர்கள் தொழிற்றுறையிலே உலகப் புகழ்பெற்றவர்கள். நம்மைப்போலவே அவர்களும் பல சந்தர்ப்பங்களிலே டென்சனுக்கும் பதற்றத்திற்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகாமல் இருந்திருப்பார்களா?

ஆனால் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்கிற வெறி, அது தந்த உந்துதல்இவை காரணமாக அவர்களால் நிலைத்திருக்க முடிந்திருக்கிறது. இவர்களுடைய அனுபவம் நமக்கு ஒரு நல்ல படிப்பினை ஆகும். மன உளைச்சலால் பெரிய தீமை எதுவும் இல்லை. ஆனால் அதை எந்தளவுக்கு நமது மனமும் உடலும் தாங்கிக்கொள்கிறது என்பதைப் பொறுத்தே அதன் பலா பலன்கள் அமைகின்றன.

மன உளைச்சலை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அது ஓர் உந்துதல் சக்தியாக நாம் வாழ்க்கையில் முன்னேற உதவுமானால் அதனை Eustress என்று சொல்லலாம். EU என்ற கிரேக்கச் சொல்லுக்கு நல்லது என்று அர்த்தம். இந்த மன உளைச்சல் நம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவும்.

இரண்டாவது வகை Distress. அதுதான் விரக்தி, தோல்வி, மனப்பான்மை. இதுதான் மோசமானது. மன உளைச் சலை உள்ளத்தில் கொளுந்து விட்டெரியும் ஒரு நெருப்புக்கு ஒப்பிடலாம். அது வெளிச்சத்தையும் தரும். தவறாகப் பயன்படுத்தினால் பொசுங்கிச் சாம்பலாகியும் விடும். அதைக் கையாளும் விதத்தில்தான் அதன் விளைவுகளை நாம் எதிர்கொள்கிறோம். குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்தல் என்ற Time Management ஐ மட்டும் நாம் தெரிந்துகொண்டால் பல பிரச்சினைகளில் இருந்து நம்மால் எளிதாக விடுபட முடியும்.

சிலசமயம் சிறுசிறு ஏமாற்றங்கள், தோல்விகள் ஏற்படலாம். அதனால் துவண்டு போக வேண்டாம். எங்கே தவறு செய்தோம். அதனைத் திருத்திக்கொண்டு அடுத்து என்னசெய்யலாம் என்று அமைதியாகச் சிந்தித்தால் அதற்கான விடைகிடைக்கும். தோல்விகளைக் கண்டு நீங்கள் மனம் தளரமாட்டீர்கள். பகீரதன் கங்கையைக் கொண்டு வந்ததே உங்களுக்குச் சரியான உதாரணம்.

இறுதியாக மன உளைச்சல் என்பது ஏதோ ஒரு பிசாசு அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அது ஒரு சோல்ஜர், நண்பன். அதாவது யுத்த களத்தில் எதிரிகளை முறியடிக்கும் வீரதீர சோல்ஜரைப்போல் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும் உற்ற நண்பன் அது. பிரச்சினைகளை நீங்கள் எப்படி அணுகுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் வாழ்வில் தோல்வியும் வெற்றியும் அமையும். டென்சன் ஆகக்கூடாதென்றுதான் நினைக்கிறோம். சில சமயம் இப்படி ஆகிவிடுகிறதே.

ஓர் அலுவலகத்தில் ஒருத்தர் இன்னொருத்தரிடம் அலுவலக நோட்டீஸ் போட்டில் மனேஜர் சனியன்று மாற்றலாகிப் போகிறார் என்று உன்னை எழுதச் சொன்னால் சனியன் இல் று வை விட்டு விட்டாயேடா பாவி! மனேஜர் சனியன் மாற்றலாகிப் போகிறார் என்று இருக்கிறதே. மனேஜர் கத்துகிறார் என்று

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் விடுதலைப் புலிகள்?



விடுதலைப் புலிகள் போரில தோற்கடிக்கப்பட்டு ஆறு வருடங்கள் நிறைவடையவுள்ளபோதிலும், இலங்கையில் விடுதலைப் புலிகளை வைத்து அரசியல் நடத்தும் போக்கு மட்டும் இன்னமும் மாறவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் இந்த நிலை முன்னர் இருந்தது.

ஆனால், அதற்கு தாமும் விதிவிலக்கானவர்கள் அல்ல, சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்று இப்போதைய அரசாங்கமும் விடுதலைப் புலிகள் விவகாரத்தை வைத்து அரசியல் நடத்த ஆரம்பித்திருக்கிறது.

தற்போதைய அரசாங்கம், தாமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் என்பதை பெரும்பான்மையின மக்களிடத்தில் வலிந்து கூற முற்படுவதாகவே சந்தேகம் தோன்றியிருக்கிறது.

அண்மையில் ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலில் உள்ள 28 நாடுகளும் அங்கம் வகிக்கும், உயர்மட்ட கொள்கைகளை தீர்மானிக்கும் சபையில், விடுதலைப் புலிகள் இயக்கம்மீதான தடையை தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை வைத்தே, இப்போதைய அரசாங்கம் பெரியளவிலான பிரசார ஆதாயத்தை தேட ஆரம்பித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை, கடந்த 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டது.

இந்த தடை விதிக்கப்பட்ட முறை தவறானது என்ற அடிப்படையில், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்திருந்தது.

இந்த தீர்ப்புக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மனு இன்னமும் மீளாய்வு செய்யப்பட்டுவரும் நிலையிலேயே, ஐரோப்பிய ஒன்றியம் இந்த முடிவை எடுத்திருக்கிறது.

உண்மையில், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கி, விடுத்த உத்தரவும் சரி, இப்போது, அந்த தடையை நீடித்து ஐரோப்பிய ஒன்றிய கவுன்சில் எடுத்துள்ள முடிவும் சரி பெரியதொரு விவகாரம் என்று கருதுவதற்கில்லை.

ஏனென்றால், இவை இரண்டுமே காலம் கடந்த செயற்பாடுகள் என்றே கூறவேண்டும். இதற்கான விளக்கம், இந்தப் பத்தியின் இன்னொரு பகுதியில் தரப்படும்.

ஆனால், இலங்கையின் இப்போதைய அரசாங்கமோ, இந்த தடை விவகாரத்தை வைத்து நன்றாகவே அரசியல் செய்யப் பார்க்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க ஐரோப்பிய ஒன்றிய கவுன்சில் முடிவெடுத்தமை குறித்து, ஐரோப்பிய ஒன்றியம் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

இலங்கை அரசாங்கம்தான் அதனை முந்திக்கொண்டு வெளிச்சத்துக்கு கொண்டுவந்தது.

பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா, இதனை ஊடகங்களிடம் தெரிவித்து, இந்த தடை நீடிப்பு இலங்கை அரசாங்கத்தின் மிகப்பெரிய இராஜதந்திர வெற்றி என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்தின் இந்த வெற்றிப் பெருமிதத்தை பெரும்பாலான ஊடகங்கள் அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை.

சாதாரணமாக ஒரு செய்தியுடன் நிறுத்திக்கொண்டன. குறிப்பாக, சிங்கள ஊடகங்களில் இது ஒரு பெரிய விவகாரமாகவே மாறவில்லை.

இது அரசாங்கத்துக்கு கடுமையான ஏமாற்றத்தையும் கடுப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கொழும்பில் பின்னர் செய்தியாளர்களிடம், இது குறித்து ஏமாற்றமும் கவலையும் வெளியிட்டிருந்தார் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா.

விடுதலைப் புலிகள் மீது மீண்டும் தடை விதிக்கப்பட்ட விவகாரத்தை, ஊடகங்கள் அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இப்போது சிங்கள ஊடகங்களுக்கு, முன்னைய அரசாங்கத் தரப்புக்கும் இப்போதைய அரசாங்கத் தரப்புக்கும் சிண்டுமுடியும் செய்திகளும் உட்கட்சிப்பூசல்கள் பற்றிய பரபரப்புகளும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகை பற்றிய செய்திகளுமே அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரிகின்றன.

அதை விட, ஊழல், மோசடி விசாரணை விவகாரங்களும் இன்னும் பிற அரசியல் கிசுகிசுக்களும்கூட தாராளமாக உலாவருகின்ற நிலையில், கொழும்பில பெரும்பாலான ஊடகங்களல், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த தடை விவகாரம் அவ்வளவாக முக்கியத்துவம் பெறாமல் போயிருக்கலாம்.

ஆனாலும், விடுதலைப் புலிகள் விவகாரத்துக்கும் இலங்கை ஊடகங்கள் முக்கியத்துவமளிப்பதை தவிர்த்து விடுகின்றன என்று கருதுவதற்கில்லை.

இதுவொரு மிகப்பெரிய அரசியல் ஆதாயம் மிக்க செய்தியாக அமையும் என்று அரசாங்கத் தரப்பு எதிர்பார்த்திருக்கிறது போலும். அதனால், அவர்களால், இந்த ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதைவிட, அந்த ஏமாற்றத்தை வெட்கமின்றி வெளிப்படையாக கூறிக்கொள்ளவும் முடிந்திருக்கிறது.

எது எவ்வாறாயினும், மீண்டும் விடுதலைப் புலிகளை அரசியலுக்கு கொண்டுவருவதில் இப்போதைய அரசாங்கமும் தனக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கியபோது, இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பதவியிலிருந்தது. அந்த தடை நீக்கத்தினால், பெரிதாக எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பதை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நன்றாகவே அறியும்.

ஆனாலும், அதை தனது அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்தியிருந்தது முன்னைய அரசாங்கம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தேர்தலுக்கு தயார் படுத்திக்கொண்டிருந்த அந்த வேளையில், அப்போது எதிர்க் கட்சித்தலைவராக இருந்த ரணில விக்கிரமசிங்கவும் அதனை எதிர்கொள்வதற்கான இரகசியத் தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி தேர்தல் கூட்டணி தொடர்பாக லண்டனில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசச் சென்றிருந்தார்.

அவர் அங்கிருந்து திரும்பியகையுடன், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் தடை நீக்க அறிவிப்பு வெளியானது.

உடனடியாகவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இது ரணில செய்த சூழ்ச்சி என்றும் லண்டனுக்கு சென்ற அவர், புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்றும் ஊடகங்களில் கடுமையான பிரசாரத்தை மேற்கொண்டது.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம், இந்த தீர்ப்பை அறிவித்தது சட்டரீதியான காரணங்களை சுட்டிக்காட்டியே என்றாலும், அது ஓர் அரசியல் ரீதியான முடிவென்று காண்பிக்க முயன்றது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம்.

இப்படியொரு செயல் நடைமுறைச்சாத்தியமே இல்லை என்று மஹிந்த அரசாங்கம் நன்றாகவே அறிந்திருந்தாலும், விடுதலைப் புலிகளை வைத்து, பெரும்பான்மையின மக்களை எப்படி ஏமாற்றலாம் என்ற வித்தையை நன்றாகவே கற்றுவைத்திருந்த மஹிந்த ராஜபக்ஷ, அதனை ரணிலுக்கு எதிரான பிரசாரமாக்கினார்.

(தொடரும்)

**-கே.சஞ்சயன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பண புகார் மீது குற்றவியல் நடவடிக்கை

**சுவிஸ் வங்கி தீவிரம்**

(டில்லி)

சுவிட்சர்லாந்து வங்கிகளில் முறைகேடாக பணம் பதுக்கி வைப்பதைத் தடுப்பதற்காக, அந்நாட்டு அரசு கணகாணப்பை பலப்படுத்தியுள்ளது.

சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் புகார்கள்மீது குற்றவியல் நடவடிகை எடுப்பதாக இந்தியா உள்ளிட்ட நாடுகள் கூறி வருவதையடு த்து, சுவிட்சர்லாந்து அரசு, இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து சுவிஸ் நிதிச் சந்தை கண்காணிப்பு ஆணையம், கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ளதாகக் கூறப்படும் கறுப்புப் பணத்தைக் கணடறிய இந்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஜெனீவாவில் உள்ள எச்எஸ்பி.சி. வங்கியில், பல்வேறு நிறுவனங்கள் சட்டவிரோதமாக பணத்தை பதுக்கி வைத்துள்ளதாக தகவல்கள் வெளியானதை அடுத்து, சர்வதேச அளவில் பரபரப்பு ஏற்பட்டது. இந் நிலையில், சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களில் பெரும்பாலானவர்கள், முறையாக வரிசெலுத்தாதது தெரிய வந்துள்ளது.

வரி விதிப்பு விவகாரத்தில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன், இரு தரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கு சுவிட்சர்லாந்து அரசு முயன்று வருகிறது.

கறுப்புப் பண விவகாரத்தில் சுவிஸ் வங்கிகளுக்கு எதிராக, அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ, பெல்ஜியம், ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகள் மிகப்பெரிய அளவில் விசாரணையைத் தொடங்கியுள்ளன.

இந்தியா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் விசாரணையைத் தொடங்க இருப்பதாக, எச்சரி த்து வருகின்றன.

இந்நிலையில், வரி விதிப்பு முறையில் இரு தரப்பிலும், கண்காணிப்பை உறுதிசெய்ய வேண்டியுள்ளது என்று சுவிஸ் நிதிச் சந்தை கண்காணிப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. (இ-5)

# புயல் தாக்கி 40பேர் பலி!

(டாக்கா)

**தெற்காசிய நாடான பங்களாதேஷில் நேற்று முன்தினம் வீசிய கடும் புயலால் நாட்டின் வடபகுதியில் உள்ள போக்ரா மாவட்டத்தில் 40 பேர் பலியானதுடன் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்**

பலத்த சூறாவளியால் வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. வெள்ளத்தில் பல வீடுகள் அடித்து செல்லப்பட்டன.

அதன் காரணமாக ஏராளமானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

வீடுகள் இடிபாடுகள் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 40 பேர் பலியாகினர். அவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்குவர். 50இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

அவர்கள் மீட்கப்பட்டு தலைநகர் டாக்காவில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீட்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பங்களாதேஷின் இளவேனில் பருவத்தில் தற்போது தான் முதன் முறையாக கடுமையாக புயல் தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

புயல் காரணமாக பலத்த சுழல் காற்றுடன் மழை கொட்டியது.

வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆறுகள், ஏரிகள் நிரம்பி ஊருக்குள் தண்ணீர் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)





ஈஸ்டர் திருநாளன்று இங்கிலாந்துப் பண்ணை ஒன்றில் புதிதாக பிறந்த ஆட்டுக் குட்டிக்கு பாசத்துடன் பாலூட்டும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்

## 80 வருடம் பழைமையான தேவாலயத்தை வெடிகுண்டு வைத்து தகர்த்த தீவிரவாதிகள்

80 வருட பழைமையான தேவாலயத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வெடிகுண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். சிரியா மற்றும் ஈரான் சில பகுதிகளை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பல்வேறு சட்டதிட்டங்களை அங்கு நிறைவேற்றி வருகிறார்கள். அங்கு தற்போது இஸ்லாம் மத சம்பந்தம் அல்லாத ஆடைகள் அணிய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாமய சட்டங்களை மீறுபவர் களை சிறையில் அடைக்கவும் உத்தர விட்டுள்ளனர். இதன்படி இறுக்கமாக ஜீன்ஸ் அணிந்த வாலிபர் ஒருவருக்கு சிறைத்தண்டனை கொடுத்துள்ளனர்.

அதுபோல் சிரியாவின் வடகிழக்கு பகுதியில் ஹசாக்காவில் டெல்க் நஸ்ரி என்ற இடத்தில் உள்ள 80 ஆண்டு பழைமையான கன்னி மேரி தேவாலயத்தை குண்டுவைத்து தகர்த்தனர். ஆனால் இதில் யாருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. தீவிர்வாதிகள் திட்டமிட்டு தேவாலயத்தினுள் வெடி குண்டு வைத்து தகர்த்து உள்ளனர்.இந்த பகுதியில் உளளகிறிஸ்தவர்களும்குர்து இன மக்களும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போராடி வருகின்றனர். (இ-5)




## ஒருநாள் போர் நிறுத்தம் ஐ.நா.அவசர தீர்மானம்

ஏமனில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், வெளிநாட்டவர்களை மீட்க ஒரு நாள் போர் நிறுத்தம் கொண்டுவர வேண்டும் என ஐ.நா.சபையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக ரஷ்யா அழைப்பு விடுத்து ஐ.நா. அவசர கூட்டம் நடைபெற்றது.

அப்போது ரஷ்யா சார்பாக தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் வெளிநாட்டவர்களை அங்கிருந்து வெளியேற்றவும் வான் வழித் தாக்குதலை குறிப்பிட்ட நேரம் வரை நிறுத்தி வைக்க வேணடும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# சாரதி இல்லாமல் பயணித்து சாதனை

சாரதி இல்லாமல், தானியங்கி முறையில் செலுத்தப்பட்ட கார் 5,500 கி.மீ. பயணம் செய்து சாதனைபுரிந்துள்ளது.

பிரிட்டனின் டெல்ஃபை நிறுவனம் இந்தத் தானியங்கிக் காரைத் தயாரித்துள்ளது. இந்தக் காரின் நீண்ட தூர சோதனை ஓட்டம் குறந்து "கிஸ்மாக்" ஆட்டோ மொபைல் ஏட்டில் தெரிவித்திருப்பதாவது, அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை நகரான சான்பிரான்சிஸ்கோ பகுதியிலிருந்து கடந்த மார்ச் 22ஆம் திகதி இந்தக் கார் புறப்பட்டது.

இக்காரில் 6 நீண்ட தூரத் திறனுள்ள ரேடார்கள், 4 குறைந்த தூரத் திறனுள்ள ரேடார்கள், பாதைச் சூழலைப் படம் பிடிக்க 3 அதிநவீன கமராக்கள், 6 நுண்ணுணர் சென்சர்கள், மோதல் எச்சரிக்கை கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன.




விரிவான மென்பொருள் கொண்ட நவீன கணனிகள் பயணப் பாதை குறித்து தரப்படும் தகவல்களைத் தொடர்ந்து ஆய்வு செய்து, காரைச் செலுத்தின.

அமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் புறப்பட்ட இந்தக் கார், 9 நாள் பயணத்துக்குப் பிறகு, 15 மாகாணங்களைக் கடந்து, கிழக்கு கடற்கரையில் உள்ள நியூயோர்க்நகருக்கு வந்து சேர்ந்தது.


டெல்பை நிறுவனத்தைச் சேர்ந்த 6 என்ஜினியர்கள் இந்தக் காரில் பயணம் செய்தனர். மிகுந்த சிக்கலான சூழலில் கார் ஓட்டும்பணியை தானியங்கி முறையிலிருந்து மாற்றிக் கொள்ளத் தயாராக ஓட்டுநர் இருக்கையில ஒருவர் எப்போதும் இருந்தார்.

எனினும் அதுபோன்ற சூழல் ஏற்படாமல், 99 பயணமும் தானியங்கி முறையிலேயே நிகழ்ந்தது என அவர்கள் தெரிவித்தனர்.

ஏராளமான வீதிச்சந்திப்புகள், சிக்னல்கள், மலைப் பாதைகள், சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள், போக்குவரத்து நெரிசல், பிற வாகனங்களின் ஆக்ரோஷமான ஓட்டுநரகள், பல தரப்பட்ட வானிலை ஆகியவற்றை வெற்றிகரமாகக் கையாண்டு, 9 நாட்களில் 5,500 கி.மீ. பயணம் செய்து இந்தக் கார் சாதனைபுரிந்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனவர்கள் தொடர்பில் நீதிவிசாரணை வேண்டி கவனயீர்ப்பு






**(கொழும்பு)**

**காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்தின் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகியபோது பிரதேச செயலகத்துக்கு முன்பாகத் திரண்ட பொதுமக்கள் வாயைக் கறுப்புத் துணியால் கட்டி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

அம்பாறை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர், படுகொலை செய்யப்பட்டோரின் உறவுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அமர்வு தொடங்கியதும், பிரதேச செயலகத்துக்குள் சென்று ஆணைக்குழு தலைவரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மனுவில், ஜனாதிபதி ஆணைக்குழு மீது எமக்கு நம்பிக்கை இல்லை என்றும், சர்வதேசத் தரத்திலான நிபுணர் குழுவைக் கொண்ட சர்வதேச விசாரணையையே தாம் கோருகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## மயூரன் சுகுமாரனின் இறுதிக்கட்ட மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்டது

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்ட இரு அவுஸ்திரேலிய பிரஜைகளின் இறுதிக் கட்ட மேன்முறையீட்டையும் இந்தோனேசிய நீதிமன்றம் நேற்று நிராகரித்துவிட்டது.

அண்ட்ரூ ஷான் மற்றும் மயூரன் சுகுமாரன் (இலங்கை வம்சாவளி தமிழர்) ஆகிய இருவரும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோவிடொடொ , தமக்கு மன்னிப்பு வழங்க மறுத்ததை எதிர்த்து மேன்முறையீடு செய்திருந்தனர்.

ஆனால், அவர்களுக்கு ஜனாதிபதியின் முடிவை கேள்விக்குள்ளாக்குவதற்கு அதிகாரம் கிடையாது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

2005 இல் அவுஸ்திரேலியாவுக்கு ஹெரோயின் போதைப் பொருளை கடத்த முயன்ற போது கைது செய்யப்பட்ட 9 பேர் கொண்ட குழுவில் இவர்கள் இருவரும் அடங்குகிறார்கள்.

அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவுஸ்திரேலியாவில் ஒரு பிரசார போராட்டம் நடக்கிறது.'

ஆனால், இவர்கள் இருவரும் மரண தண்டனைக்கான ஏற்பாடுகளுக்காக ஏற்கனவே இந்தோனேசிய தீவு ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டார்கள். (இ-5)

## பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

மு/வித்தியாணந்தா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் க.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

எனவே பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி சமூகத்தினர் கேட்டுள்ளனர். (2)

## திருடச்சென்ற நபர் ஒருவர் ஆலயத்தில் மடக்கிப் பிடிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

அச்செழு மேற்கு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திருடச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரை ஆலய பரிபாலன சபையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, அச்செழு மேற்கில் அமைந்துள்ள ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த சில மாதங்களாக ஆலய பொருட்கள் திருடப்பட்டு வந்துள்ளன.

இதனால் ஆலய பரிபாலன சபையினர் நள்ளிரவு வேளைகளில் ஆலயத்துக்கு சென்று பார்ப்பதுண்டு.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு வேளை இவ்வாறு சென்று பார்த்த வேளை கோயிலின் உள்ளே நின்று ஒருவர் வெளியே ஓடியுள்ளார்.

அவரைத் துரத்திப் பிடித்த பரிபாலன சபையினர் அவரை அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-78)

## புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவராக பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

மீள்குடியேற்ற, புனரமைப்பு மற்றும் இந்து கலாசார அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் நவசிவாயம் பத்மநாதனை புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவராக நியமித்துள்ளார்.



இவர் பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியும் ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழக (PIM) MBA பட்டதாரியும் அத்துடன் திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணியுமாவார்.

இவர் 1967இல் இலங்கை நிர்வாகச் சேவையில் இணைந்து பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ளார். இதில் வடகிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளராகவும் மேலதிக பணிப்பாளர் நாயகமாக திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்திலும் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயக மாகவும் கடமை ஆற்றியுள்ளார்.

மேலும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு மற்றும் வனவள சுற்றாடல் அமைச்சு செயலாளராகவும் கடமை ஆற்றியதுடன் திறைசேரி பிரதிச் செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

அவர் அரச சேவையில் ஓய்வு பெற்ற பின்னர் ஐக்கிய நாடுகள் வசிப்பிடம் தொடர்பான அமைப்பில் (UN Habitat)நிபுணராகவும் கடமை புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மலரட்டும் புதுவசந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்துணைத்தூதரகமானது வட மாகாணசபையின் கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து மலரும் புத்தாண்டை வரவேற்குமுகமாக ஓர் கலாசார விழாவை எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, நெல்லியடி மத்திய கல்லூரி கலாசார மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## ஏமனிலிருந்து இலங்கையர்கள் வெளியேற முடியாத அவலநிலை

(கொழும்பு)

ஏமனிலிருந்து 43 இலங்கையர்கள் வெளியேற முடியாது நெருக்கடியான சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையிலுள்ள அதிகாரிகளின் எந்தவித தொடர்புகளும் இல்லாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையர்கள் கப்பல் ஒன்றின் ஊடாக நாடு திரும்புவதற்கு ஏமன் தலைநகர் சனாவில் இருந்து 300 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கோடேடா துறைமுகத்திற்கு சென்றுள்ளனர் என தக்வல் வெளியாகியுள்ளது.

ஏமனில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள 43 இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**துரையப்பா**
**தில்லையம்பலம்**

இணுவில் கிழக்கைச் சேர்ந்த துரையப்பா தில்லையம்பலம் கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஆம் திருத்தச் சட்டம் ரணிலின் சூழ்ச்சி திட்டம்

**(கொழும்பு)**

**19ஆம் திருத்தச் சட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஓர் சூழ்ச்சித் திட்டமாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.**

**ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க இதனைத தெரிவித்துள்ளார்.**

19ஆம் திருத்தச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யாது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் நிச்சயம் அதனை தோற்கடிப்போம்.

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் நோக்கமாகும்.

மாறாக தனிப்பட்ட நபர்களின் விருப்பு வெறுப்புக்களை பூர்த்தி செய்யும் அரசியல் அமைப்பு ஒன்று அவசியமற்றது.

19ஆம் திருத்தச் சட்டம் நீதிமன்றின் ஊடாகவேனும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற காரணத்தினால் நீதிமன்றின் ஒத்துழைப்பை நாடினோம்.

குறைகள் களையப்பட்ட 19ஆம் திருத்தச் சட்டமே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தற்போதைய 19ஆம் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிவில் பாதுகாப்பு படையினர் நீக்கம்

(கொழும்பு)


அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு படையினரை அந்த பணிகளில் இருந்து திரும்ப அழைப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், அரசியல் வாதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்புகளை குறைப்பது என தீர்மானித்திருந்தது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத எவருக்கும் படையினரின் பாதுகாப்பு வழங்கப்படாது எனவும், பொலிஸாரின் பாதுகாப்பு மாத்திரமே வழங்கப்படும் எனவும் அரசாங்கம் முன்னர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நலம் விசாரிக்கும் நாமல்



**அம்பாந்தோட்டையில் கடை வைத்திருக்கும் பெண்மணியிடம் நலம் விசாரிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் நாடாளு மன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ...**

# தமிழ்மக்களுக்கு அநீதி நடக்கும்போது குரல் கொடுப்பவன் நானே! - தயாரத்ன

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக 38 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து வருபவர்கள் பிரதமர் ரணிலும் நானும்.

கடந்த தடவை பொதுஜன ஐக்கிய முன்னணியில் கேட்டு 3 ஆசனங்களைப் பெற்றோம். இம்முறை மீண்டும் ஐ.தே.கட்சியில் கேட்டு மூன்று ஆசனங்களைப் பெறுவோம் எனவும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் உள்ளும் புறமும் குரல் கொடுத்து வருபவன் தான் மட்டுமேயெனவும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.தயாரத்ன சூளுரைத்தார்.

காரைதீவில், அமைச்சரின் அரசியல் விவகாரங்களுக்கான இணைப்பாளர் வீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் உள்ளும் புறமும் குரல் கொடுத்து வருபவன் தான் மட்டுமேயெனவும் வட்டமடு விவகாரத்திலும் கல்முனை தமிழ் பிரதேச செயலக விவகாரத்திலும் கூடிய அழுத்தம் கொடுத்தவன். அதற்காக முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒருபோதும் செயற்பட்டவனல்ல.

தலைவன் என்ற அடிப்படையில் எந்த இனத்திற்கு அநீதி நடக்கின்றதோ அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதற்காக குரல்கொடுத்தேயாக வேண்டும். அதனையே செய்து வருகின்றேன்.

துரதிர்ஷ்டவசமாக அமைச்சரவையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய தமிழ் அமைச்சர்கள் இல்லாதது பெருங் குறையே.

எனவே தமிழ் மகன் ஒருவன் ஏதாவது தேசியக் கட்சியினூடாக தேர்தலில் நின்று பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி அமைச்சராக வேண்டும்.அப்போது நாம் மௌனிப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெறுமனே உரிமை உரிமை என்று காலத்தைப் போக்காமல் உரிமையோடு மக்களின் அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொடுப்பவர்களாக மாறவேண்டும். கிழக்கில் அந்த மாற்றம் வந்திருக்கிறது. மத்தியிலும் வரவேண்டும்.

யாருக்காகவும் நான் எனது கொள்கையை மாற்றமாட்டேன். இந்தத் தடவையுடன் ஓய்வுபெற விரும்புகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தில் நண்பர் தயாகமகே யுடன் இணைந்தே பயணிப்போம்.

எம்மிடையே எந்த வேறுபாடுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பெருந்தோட்ட சமூகத்தின் அபிவிருத்திக்கு 10 ஆண்டு தேசிய செயற்றிட்டம் தயாரிப்பு

பெருந்தோட்ட பகுதிகளான மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும தென் மாகாணங்களைச் சேர்ந்த 2இலட்சத்து 60 ஆயிரம் பெருந்தோட்ட சமூகத்தின் பொருளாதார மற்றும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் பொறுப்பாகும்.

இக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு இவ்வமைச்சானது, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக பெருந்தோட்ட சமூக அபிவிருத்திக்கான 10 ஆண்டு தேசிய செயற்றிட்டத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பான உயர்மட்ட சந்திப்பொன்று பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர், பழனி திகாம்பரம் தலைமையில் ஐ.நா. சபை வதிவிடப் பிரதிநிதி சுபிநேநந்தி மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவி பணிப்பாளர் ஆர்.கணேசராஜா, ஆலோசகர் எம்.வாமதேவன், திட்டப்பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சின் மேலதிகாரிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் பிரகாரம் பெருந்தோட்ட அபிவிருத்திக்கான 10 ஆண்டு செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பெருந்தோட்ட துறைசார்ந்த பிரதேசங்களில் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதே 10 ஆண்டு தேசிய செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும் என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார். மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளானது வறுமைநிலையை குறைத்தல, ஆரம்ப கல்வி, பால் சமநிலை, பெண்களை வலுப்படுத்தல், குழந்தை இறப்பு வீதத்தை குறைத்தல், கர்ப்பிணி பெண்களின் ஆரோக்கியத்தை உயர்த்தல், அச்சுறுத்தலான நோய்களை இல்லாதொழித்தல், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுத்தமான குடிநீர், மலசலகூட வசதிகளை அதிகரித்தல போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

மிலேனியம் அபிவிருத்தி குறிகாட்டிகள், இலங்கையில் தேசிய மட்டத்தில் அடையப்பட்ட போதிலும் பெருந்தோட்ட பகுதிகளில் தேசிய சராசரி மட்டத்தினை விட குறைவாகவும் சில விடயங்களில் இலக்கிலிருந்து விலகியதாகவும் காணப்படுவது அபிவிருத்திக் கண்ணோட்டத்தில் கவலைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

10 ஆண்டு செயற்றிட்டத்தை தயாரிக்கும் போது பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சானது தேசிய மட்டத்திலான கொள்கை வகுப்பாளர்கள், திட்டமிடலாளர்கள், துறைசார் நிபுணர்கள், ஆய்வாளர்கள் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் (PHDT), UNDP, UNICEF, U.N. Habitat மற்றும் அபிவிருத்திப்பங்காளர்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜேர்மனி நன்கொடை நிதியம் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், தோட்ட ஊழியர் சங்கம், பிராந்திய தோட்ட கம்பனிகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள் உள்ளடக்கிய தொழிலாளர்களின் சங்கம் மற்றும் சிவில் சமூக ஒருங்கமைப்புக்களின் பாரிய ஒத்துழைபபு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான தேசியமட்ட கலந்துரையாடல் எதிர்வரும் வாரங்களில் இடம்பெற உள்ளதாகவும் தேசிய அபிவிருத்தி செயற்றிட்டத்தினை தயாரிக்கும்போது வீடமைப்பு, நீர் விநியோகம், ஆரம்ப கல்வி, சிறுவர் அபிவிருத்தி நிலையம், விளையாட்டுத்துறை அபிவிருத்தி, வதி அபிவிருத்தி, மின்சாரம் வழங்கல், திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சிகள், சுகாதாரம், சமயம், கலாசாரத துடன இணைந்ததான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை உள்ளடக்குவதற்க தீர்மானிக்கப்பட்டது.

இத்தேசிய செயற்றிட்டத்தை 2015 ஜூலை மாத இறுதிக்குள் தயாரிப்பதற்கு கால அட்டவணை இடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பெருந்தோட்ட சமூக அபிவிருத்திக்கான 10 ஆண்டு தேசிய செயற்றிட்டம் அரசின் தேசிய கொள்கைகளுக்கு அமைவானதாக தயாரிக்கபபடுமெனவும் இதன்மூலம் பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்வாதார நிலை மேம்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் வீரர்கள் மற்றும் வெளிநாட்டு அனுபவ வீரர்களை கொண்டது மும்பை

ரோகித் சர்மா



திறமை வாய்ந்த இந்திய இளம்வீரர்கள் மற்றும் வெளிநாட்டு அனுபவ வீரர்களை சமநிலையில் கொண்ட அணி மும்பை இந்தியன்ஸ் அணி என்று ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது.

நாங்கள் நல்ல திறமையுள்ள இந்திய வீரர்கள் எங்களுடைய அணியில் இடம் பெற்றுள்ளனர். கடந்த சீசனில் விளையாடிய 15 முதல் 16 வீரர்களை தக்க வைத்துள்ளோம். நல்ல சமநிலையில் உள்ள அணி எங்களது. வெளிநாட்டு வீரர்கள் சிறப்பான நிலையில் செயற்படுகிறார்கள். ஐ.பி.எல். சீசனை சிறப்பான முறையில் தொடங்குவோம் என்ற நம்பிக்கையுள்ளது.

கொல்கத்தாவில் நடைபெற இருக்கும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தாவுடன் மோத இருக்கிறோம். சில சமயங்களில் அது சிறப்பாக அமையலாம். கொல்கத்தா ஈடன்கார்டனில் நாங்கள் சிறப்பாக செயற்பட்ட வரலாறு உண்டு. கடநத 2013 ஆம் ஆண்டு சென்னையை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது அங்குதான். அங்குள்ள சூழ்நிலைகள் எங்களுக்கு நன்றாக தெரியும். புதன்கிழமை தொடங்கும் முதல் போட்டி எங்களுக்கு முக்கியமானது. அதில் சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக்கொள்ள துடிக்கும் கொல்கத்தாவை எதிர்த்து நாங்கள் விளையாட இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். (க)

# உலக சாதனையைச் சமன் செய்த இலங்கையின் சானக வெலிகிடரா


இலங்கை அணியின்வேகப் பந்து வீச்சாளர் ருவன்ரி 20 போட்டி யில் சிக்கனமாக பந்து வீசுவதில் தென்னாபிரிக்க வீரர் கிரிஸ் மோரிஸின் சாதனையை சமன் செய்துள்ளார்.

நேற்று நடந்த உள்ளூர் ருவன்ரி 20 போட்டியில் Sinhalese Sports Clubக்கு எதிராக அசத்திய வெலிகிடரா 4 ஓவரில் 2 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். மேலும் 2 மெய்டன் ஓவர்களையும வீசினார்.

இதன் மூலம் கடந்த வருடம் 4 ஓவர்களுக்கு 2 ஓட்டங்கள், 3 மெய்டன் ஓவர், 2 விக்கெட் என சிக்கனமாக பந்துவீசிய தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் கிரிஸ் மோரிஸின் சாதனையை வெலிகிடரா சமன் செய்துள்ளார். 34 வயதான சானக வெலி கிடரா, 21 டெஸ்ட் போட்டி, 10 ஒரு நாள் போட்டி, 2 ருவன்ரி 20 போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடியுள்ளார்.

# பெங்களூர் அணியில் ஸ்டார்க் விரைவில் இணைந்து கொள்வார்

## விராட் கோலி நம்பிக்கை



பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் சீருடை அறிமுக நிகழ்ச்சி மும்பையில் நேற்று முன்தினம் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அந்த அணியின் கப்டன் விராட் கோலி அளித்த பேட்டியில், 'முழங்காலில் காயம் அடைந்த மிட்செல் ஸ்டார்க் (அவுஸ்திரேலியா) குணமடைந்து வருகிறார். அவர் முதல் 4 ஆட்டங்களுக்கு பிறகு எங்களது அணிக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கிறோம்.

கடந்த சில ஆண்டுகளாக நான் (கோலி), கெய்ல், டிவில்லியர்ஸ் ஆகியோர் பட்டிங்கில் சிறப்பாக செயற்பட வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இந்த ஆண்டில் தினேஷ்கார்த்திக், டேரன் சமி, பத்ரிநாத், மன்தீப் சிங் ஆகியோர் எங்கள் அணியில் இடம் பெற்று இருப்பது பட்டிங்கில் எங்கள் அணிக்கு கூடுதல் வலுச்சேர்க்கும் என்று தெரிவித்தார். (க)

# ஆண்டி முர்ரேயினை வீழ்த்தி பட்டம் வென்றார் ஜோகோவிச்



மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் செர்பியாவை சேர்ந்த உலகின் நம்பர்.1 வீரரான ஜோகோவிச் பட்டம் வென்றார்.

2 மணி நேரம் 46 நிமிடம் நடைபெற்ற கடுமையான இப்போட்டியில், தரவரிசை பட்டியலில் 3 ஆம் நிலை வீரரான முர்ரேவுடன், ஜோகோவிச் மோதினார். முதல் செட்டில் இருவரும் ஒருவருக்கொருவர் கடுமையான சவாலை தந்ததால் அது டை-பிரேக்கர் வரை சென்றது. அதில் சிறப்பாக விளையாடிய ஜோகோவிச் முதல் செட்டை 7-6(7-3) என்ற கேம் கணக்கில் கைப்பற்றினார்.

2 ஆவது செட்டில் சுதாரித்து விளையாடிய முர்ரே 4-6 என்ற கேம் கணக்கில் கைப்பற்றினார். ஆனால் 3 ஆவது செட்டில் மீண்டும் பார்முக்கு வந்த ஜோகோவிச் 6-0 என்ற கேம் கணக்கில் கைப்பற்றி, சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் 5 ஆவது முறையாக மியாமி ஓபன் சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச், முர்ரேவுக்கு எதிராக 18-8 போட்டிகளில் வெற்றி என்ற வாழ் நாள் சாதனையையும் படைத்தார். (க)

# மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் சானியா-ஹிங்கிஸ் ஜோடி சம்பியன்



அமெரிக்காவில் நடைபெற்று வரும் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் சானியா மிர்சா-மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், டென்னிஸ் தரவரிசை பட்டியலில் முதல்நிலை ஜோடியான சானியா-ஹிங்கிஸ் இணை, தரவரிசை பட்டியலில் 2 ஆம் நிலையில் உள்ள எலெனா வெஸ்னினா-எகடரினா மகரோவா ஜோடியை எதிர்கொண் டது.

முதல் செட்டில் கடும் போட்டி நிலவிய போதிலும் 7-5 என்ற கேம் கணக்கில் சானியா-ஹிங்கிஸ் ஜோடி கைப்பற்றியது.

இரண்டாவது கேமை 6-1 என்ற கணக்கில் எளிதாக கைப்பற்றிய இந்த ஜோடி 66 நிமிடத்திலேயே ஆட்டத்தை வென்று பட்டத்தை கைப்பற்றியது. இரண்டு வாரங்களுக்கு முன் பி.என்.பி. பாரிபாஸ் ஓபன் பைனலில் சம்பியன் பட்டம் வென்ற சானியா-ஹிங்கிஸ் ஜோடி, அதே வேகத்தில் மியாமி ஓபன் இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற்று கோப்பையைக்கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்குதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலாகும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## செயலாளர்களை அடிக்கடி இடமாற்றுவது சரியானதா?

நந்தவனத்தில் ஓர் ஆண்டி
அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தானடி ஒரு தோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி

என்பது ஒரு சித்தரின் பாடல். குறித்த பாடலின் பொருள் வேறுபாட்டதாயினும் வடக்கு மாகாண அரசின் நிர்வாகச் செயற்பாட்டிற்கு மேற்குறித்த பாடல் பொருந்துவதாக இருப்பதைக் காணமுடிகிறது.

தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்று கேட்ட நமக்கு வடக்கு மாகாண அரசு கிடைத்துள்ளது. உலக நாடுகள் சில செய்த சுயமைத்தனத்தால், எங்கள் விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. இருந்தும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை மூலமாவது தமிழருக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தமிழர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ள வேளையில், வடக்கு மாகாண அரசின் ஆட்சியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

தமிழர்களுக்கு ஒரு நாடு கிடைத்தால் எங்ஙனம் ஆட்சி செய்வார்கள்? என்பதை உலகுக்கு காட்டுகின்ற சந்தர்ப்பமாக வடக்கு மாகாண சபையை தமிழர் அரசு பயன்படுத்தும் என்று நினைத்தால், நிலைமை படுமோசம் என்று சொல்லும் அளவிலேயே உள்ளது.

வடக்கு மாகாண அரசின் இயங்குநிலைக்கு முன்னைய அரசும் முன்னைய ஆளுநரும் தடையாக இருந்தனர் என்பதில் உண்மை உண்டு.

முன்னைய ஆட்சியாளர்களும் ஆளுநரும் திட்டமிட்டு முட்டுக்கட்டை போடுகின்றனர் என்பது வெளிப்படையாகத் தெரியும் போது–அதனைத் தடுக்க முற்பட்டால் ஆபத்து ஏற்படும் என்பதும் உண்மை என்ற செய்தியை அறிந்திருந்தும் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரை இடமாற்றுவதில் வடக்கு மாகாண அரசு உறுதியாக நின்று அதனை அரங்கேற்றியது.

இச் செயல் வடக்கு மாகாண அரசின் நியாயப்பாடுகள் நடுநிலைமையானவை அல்ல என்பதை உறுதிப்படுத்தியது. எதுவாயினும் வடக்கு மாகாணத்தின் முன்னாள் பிரதம செயலாளரை இடம்மாற்றும் போது அதற்கு வடக்கின் ஏனைய செயலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து; முன்னைய ஆளுநரின் செயற்பாட்டில், பிரதம செயலாளர் எதுவும் செய்ய முடியாது. எனவே அவரை இடமாற்றுவது தவறு என்பதை வடக்கின் அரசுக்கு சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

அதைச் செய்யாததால், இப்போது அமைச்சின் செயலாளர்களை மாற்றுதல் என்ற கோட்பாட்டை வடக்கு மாகாண அரசு பின்பற்றுகிறது.

அமைச்சின் செயலாளர்களை அடிக்கடி மாற்றுவதால் நிலைமை மோசமாகும் என்பதை உணர்வதற்கு எவரும் இல்லை. குறித்த ஒரு அமைச்சின் செயலாளராக ஒருவரை நியமிக்கும் போது அதில் அவரின் செயலூக்கம் துலங்குவதற்கு சிறிது காலம் எடுக்கும். குறித்த அமைச்சின் அமைப்பு முறைகளை அறிந்து நிலைமைகளை சீராக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, சம்பந்தப்பட்ட செயலாளரை இடமாற்றினால் எல்லாமுமே குலைவுற்றுப் போகும் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனினும் இந்த உண்மையை உணர்வதற்கும்; உணர்த்துவதற்கும் ஆளில்லாததன் காரணமாக இடமாற்றம் என்பது சர்வசாதாரணமாக வடக்கு மாகாண சபையில் அரங்கேறி வருகிறது.

# வடக்கு மாகாணத்தின் கல்வியை தீய சக்திகள் குழப்ப முயற்சி!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் கல்வியைக் குழப்ப தீய சக்திகள் முனைகின்றன. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடமாகாணத்தில் ஆசிரிய அங்கத்துவமே இல்லாத பெரும்பான்மை இனம் சார்ந்த ஆசிரிய தொழிற்சங்கம் ஒன்று அதிரடி இடமாற்றம், ஆசிரிய இடமாற்றம், செயலாளரின் இடமாற்றம் என்று எல்லாவற்றிலும் மூக்கை நுழைத்து வடமாகாணத்தின் கல்வியைக் குழப்ப முயற்சி செய்கின்றது.

வடமாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரை இடமாற்றம் செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன் பின்னணி என்ன என்பதனை மிகவிரைவில் நாம் வெளிப்படுத்துவோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வன்னிப்பிரதேசத்திற்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போது பாடசாலைகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களின் விருப்பத்துடன் பிள்ளைகளின் நலன் கருதி செய்யப்படுகின்ற இடமாற்றங்களைக்கூட இவர்கள் தடுக்கின்றார்கள்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் ஏற்பட்ட ஆசிரிய வெற்றிடங்களை பொருத்தமான ஆசிரியர்களைக்கொண்டு யாழ்ப்பாணக் கல்வி வலயம் சீரான முறையில் ஆசிரிய இடமாற்றங்களை மேற்கொள்கின்றது. இதனை யாழ்ப்பாண வலயத்தில் உள்ள பிள்ளைகளின் நலனில் அக்கறையுள்ள எமது உறுப்புரிமையுள்ள ஆசிரிய அங்கத்தவர்கள் அனைவரும் ஏற்று செயற்படும் நிலையில், அவர்களின் சேவையை அவமதிக்கும் செயலாக இப்படியான தொழிற்சங்கங்கள் நுழைந்து அவற்றைத் தடுத்து நிறுத்துவதை நாம் இனிமேலும் அனுமதிக்க முடியாது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-11)

## 500 வரையான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

பிரபல்யமான தனியார் கம்பனி ஒன்றின் 500 வரையான வெற்றிடங்களுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வு பொதுமக்கள் தொழில் சேவை நிலையம் ஊடாக நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள பொதுமக்கள் தொழில் சேவை நிலையமானது தொழிலை எதிர்பார்க்கும் தொழில் தேடுவோருக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்காக பிரபல்யமான தனியார் கம்பனியிடமிருந்து 500 வரையான தொழில் வெற்றிடங்களைப் பெற்றுள்ளது.

இவ் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத்தேர்வு இம்மாதம் மாவட்ட பொதுமக்கள் சேவை நிலையத்தினால் நடத்தப்படவுள்ளது.

இந் நேர்முகத்தேர்வுக்கு தோற்ற விரும்பும் க.பொ.த உயர்தரம் அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் குறைந்தது 05 பாடங்கள் சித்தியடைந்த, 27 வயதிற்கு மேற்படாத ஆண்களும், 24 வயதிற்கு மேற்படாத பெண்களும் தோற்றலாம்.

இதற்கான பதிவினை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்திற்கு தொழில் வழிகாட்டி நிலையம். 2015. 04.21-ம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளலாம். மேலதிக விளக்கங்களை பெற்று கொள்ள 021 221 9359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (செ-11)

## பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினராக குமாரவடிவேல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உறுப்பினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதிகவியல் துறை சார் ஓய்வுநிலைப் பேராசிரியர் இ.குமாரவடிவேல் 5 வருட காலப் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி மொஹான் டீ சில்வாவின் பரிந்துரையின் பெயரிலேயே பேராசிரியர். இ.குமாரவடிவேல் ஆணைக்குழு உறுப்பினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் குமாரவடிவேல் யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதியாக 11 வருடங்கள் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## பட்டாசு சாலையில் பாரிய தீ விபத்து

சிலாபம் பல்மை பிரதேசத்தில் பட்டாசு கைத்தொழிற்சாலையொன்றில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்து காரணமாக பட்டாசு தொழிற்சாலை முற்று முழுதாக சேதமடைந்துள்ளது. இச் சம்பவத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பல்மை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நாகவில என்னும் இடத்தில் இயங்கி வந்த பட்டாசு கைத்தொழிற்சாலையே இவ்வாறு பாரியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர் சுனில் சாந்த என்ற 40 வயதான நிறுவனத்தின் உரிமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. பட்டாசுகளை உற்பத்தி செய்து கொண்டிருந்தபோது இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-4)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு மயிலங்காட்டை சொந்த இடமாகக் கொண்ட தச்சுத் தொழிலாளி நேற்று காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 7.45 மணியளவில் மயிலங்காடு அம்மன் கோவிலில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் 7 பிள்ளைகளின் தந்தையும், 69 வயதுமான வைரமுத்து சண்முகலிங்கம் என்பவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

வைரமுத்து சண்முகலிங்கம் மயிலங்காடு அம்மன் கோவிலடியில் தச்சுத்தொழில் செய்து வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு வீட்டுக்குச் சென்று இரவு உணவு உட்கொண்டுள்ளார். பின்னர் காலை எழுந்து பார்க்கையில் அவர் வீட்டில் இல்லை. பிள்ளைகளும், மனைவியும் வேலைக்குச் சென்று விட்டதாக எண்ணி அவரைத் தேடவில்லை.

இருப்பினும் காலை மயிலங்காடு அம்மன் கோவிலடியால் வந்த சிலர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக சுன்னாகப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அதன்படி குறித்த இடத்திற்கு வந்த சுன்னாகப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



எங்கள் இந்து முன்னோர்கள் தனியிடத்தில் அமர்ந்து இறைவனையும் ஒழுக்கத்தையும் பற்றிச் சிந்தித்தார்கள். எனவே அதே நோக்கத்திற்காகப் பயன்படும் அறிவுத்திறனை நாங்கள் பெற்றோம். ஆனால் பொருள் தேடுவதில் எங்களுக்குள்ள வேகத்தால் அந்த அறிவுத்திறனை இழந்து வருகிறோம்.

சுதந்திரமும் மேலான அன்பும் இணைபிரியாமல் இருக்கவேண்டும். அப்போது இரண்டுமே பந்தமாகாது.

பிற உடம்புகளிலும் நீ இருப்பதை உணரக் கற்றுக்கொள். நாம் அனைவரும்ஒன்றே என்பதைத் தெரிந்துகொள். மற்ற அறிவீனங்களை எல்லாம் காற்றில் பறக்கவிடு. நற்செயல், தீய செயல் நிகழ்ந்ததை நிகழ்ந்ததுதான். மூட நம்பிக்கையைவிடு. மரணமே எதிர்வந்தாலும் பலவீனம் அடையாதே.

ஆசை என்னும் மதுவை அருந்தி, உலகம் பித்துப் பிடித்துப்போய் இருக்கிறது. இரவும் பகலும் சேர்ந்து வருவதில்லை. அதுபோலவே ஆசையும் இறைவனும் சேர்ந்திருக்க முடியாது. ஆசையை விடு.

நடந்ததை எண்ணி வருந்தாதே. கடந்ததை எண்ணிக் கலங்காதே. நீ செய்த நல்ல செயல்களையும் நினைவில் வைத்துக்கொள்ளாதே. சுதந்திரனாக இரு. பலவீனனாக, பயந்தவனாக, முட்டாளாக இருப்பவன் ஆன்மாவை அடைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு மோதலில் அறுவர் காயம்

முல்லைத்தீவு, வற்றாப்பளை பிரதேசத்தில் இரு விளையாட்டுக் குழுக்களுக்கு இடையில் நடைபெற்ற மோதலில் ஆறு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

குறித்த பிரதேசத்தில் இடம்பெற்ற காற்பந்தாட்ட போட்டியின் இறுதிநாள் சுற்றுப்போட்டி, நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய இரு பிரதேசங்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய நிலையில் போட்டிகள் இடம்பெற்றன.

இந்த சந்தர்ப்பத்திலேயே இரு விளையாட்டுக் குழுக்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டு அது மோதலாக மாறியது. இந்த குழு மோதலில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டுக்கழக வீரர்கள் ஆறு பேர் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மோதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் முள்ளியவளையைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் முள்ளியவளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2)

# அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவு

### கிளிநொச்சியில் மகளிர் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றது. எனவே இதனை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டுமென மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நடைபெற்ற வடக்கு மாகாண பெண்களை வலுவூட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 30 வருடகால யுத்ததால் பாதிக்கபபட்ட வடக்கு மாகாணத்தில் இவ்வாறான ஒரு பெண்களை வலுவூட்டும் நிக ழ்வை ஏற்பாடு செய்து நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன.

நாட்டில் தற்போது ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட்டு நல்லாட்சி நடைபெற்று வருகின்றது எனவே இந்த ஆட்சி மாற்றத்திற்கு அசுரபலமாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய வடக்கு மாகாண மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

வடக்கு மக்கள் மிகவும் தைரியமானவர்கள் மன வலிமையுள்ளவர்கள் என அவர் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் பிரச்சினை தொடர்பாக எமக்கு முன்னர் ஒரு பயம் இருந்தது ஆனால் இன்று அந்த விடயத்தில் தற்போது எமது பிரச்சினைக்கு நாமே தீர்வு காணக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை குறைப்பதற்காக பாராளுமன்றத்தில சட்ட வரைபு ஒன்றை சமர்ப்பித்துளளோம். எதிர்வரும் காலங்களில் சட்டங் களில் மாற்றங்கள் கொண்டுவர உத்தேசித்துள்ளோம்.

இலங்கையில் 52 வீதமான பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள் ஆனால் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக பாராளுமன்றத்தில் 5.7 வீதமே பெண்கள் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. எனவே இதனை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும் என தெரிவித்தார். (2-4)




# முல்லைத்தீவு பொதுச்சந்தை கடைகள் ஏலம் கூறல் இன்று

### கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவுமாவட்டத்தில்உள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபையின் கீழுள்ள முல்லைத்தீவு பொதுச் சந்தைக்கான ஏலம் கூறல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேசசபைச்செயலாளர்ஜெயசீலன் செல்வன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு பொதுச் சந்தையின் மீன் மற்றும் மரக்கறி விற்பனைப்பகுதிகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு கேள்வி ஏலம் விடப்படவுள்ளது.

இதில் மரக்கறி வியாபார 36 மேடைகளும் மீன் வியாபார 8 மேடைகளும் ஏலம் விடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏலம் கோர விரும்புபவர்கள் இன்று காலை 8.30மணியிலிருந்து முற்பகல் 10மணிக்குள் கேள்வி வைப்புப் பணத்தினையும் மற்றும் படிவப்பணத்தினையும் முல்லைத்தீவு பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டை பெற்றதன் பின்னர் கேள்வி ஏலத்தில் பங்கேற்க முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## போக்குவரத்திற்கு இடையூறாக வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கனகபுரம் திருநகர் பிரதான வீதி, புகையிரத நிலையத்திற்கு செல்லும் வீதி ஆகிய சிறு வீதிகள் ஏ-9 வீதியை இணைக்கின்ற இடத்திற்கு குறுக்காக போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளதாக வாகனச் சார திகள் ,பொதுமக்கள் ஆகியோர் விச னம் தெரிவித்துள்ளனர்.

குறித்த இரண்டு வீதிகளும் கரைச்சி பிரதேசசபைக்கு அருகாமையாகச்செல்கின்ற வீதிகளாகும்.

இவ்வீதிகளின் ஊடாக போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள்,கனரகவாகனங்கள் என்பன பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு பயணிப்பதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனமெடுத்து சீரான போக்குவரத்தை மேற்கொள்ள உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-272)

# போக்குவரத்து பொலிஸார் துரத்திச் சென்ற மோட்டார்சைக்கிள் கிணற்றினுள் விழுந்தது

### 3 பேர் காயம்

(கிளிநொச்சி)

போக்குவரத்து பொலிஸார் துரத்திச் சென்ற மோட்டார் சைக்கிளும் அதில் பயணித்த மூவரும் 22 அடி மண் கிணற்றினுள் வீழ்ந்ததில் பயணம் செய்த மூவர் காயம் அடைந்த நிலையில் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி ஆனந்த நகரில் நடைபெற்றுள்ளது.

இதன்போது கிளிநொச்சி அம்பாள் குளத்தைச் சேர்ந்த சி. சுதர்சன் (வயது-20), இ.பிரியா (வயது-16), இ.டல்சிகா (வயது-16) ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஆனந்தநகர் உள் வீதியில் மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப நபர்கள் சென்று கொண்டிருந்த போது போக்குவரத்து பொலிஸார் இவர்களை மறித்துள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திய இவர்களை போக்குவரத்து பொலிஸார் துரத்தியுள்ளனர். இதனையடுத்து வேகக் கட்டுப் பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த 22 அடி மண் கிணற்றினுள் விழுந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டனர். காயமடைந்த மூவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். (2-271)

## இலட்சக்கணக்கான பொதுமக்களை முன்னைய அரசு கொன்று குவித்தது

### மகளிர் விவகார பிரதியமைச்சர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

முன்னைய அரசாங்கம் பயங்கரவாதத்தை அழிப்பதாகக் கூறி இலட்சக்கணக்கான அப்பாவி பொதுமக்களைக் கொன்று குவித்துள்ளது என மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில,

யுத்தம் முடிந்து 6 வருடங்கள் ஆகிவிட்டது ஆனால் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படவில்லை குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முன்னைய அரசாங்கம் அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு வீதிகளையும் கட்டடங்களையும் கட்டியுள்ளார்களே தவிர யுத்தத்தால் அங்கவீனமானவர்களுக்கோ விதவைகள் ஆக்கப்பட்டவர்களுக்கோ எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

வடபகுதிக்கென ஒதுக்கப்பட்ட நிதி எங்கே போய்விட்டது காங்கேசன்துறை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாளிகைக்கு தான் அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதி செலவழிக்கப்பட்டுள்ளது போல தெரிகிறது என அவர் தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கம் விடுதலைப்புலிகளை அழிக்கிறோம், பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என கூறி யுத்தத்தை நடத்தி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்களை கொன்று குவித்திருக்கிறது என்றார். (2-4)

# பனிக்கன்குளம் விபத்தில் சிக்கிய தாய் சிகிச்சை பலனின்றி மரணம்

(வவுனியா)

வவுனியா பனிக்கன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் முச்சக்கரவண்டியும் பிக்கப் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்நத தாய், தந்தை, சிறுமி ஆகிய மூவரும் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தாயாரான சிவகுமார் தவமலர் (வயது -30) என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

ஏனையோர் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம் ஜொலிஸ்ரார் முன்னிலையில்




ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 6 ஆவது வருடமாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த அணியை தெரிவு செய்யும் நிகழ்வில் 01.01. 2015 தொடக்கம் 31.03.2015 வரை நடைபெற்ற 12 போட்டிக ளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஜொலிஸ்ரார் அணி .74 புள்ளிகளைப் பெற்று முன் னிலையில் உள்ளது.

ஜொலிஸ்ரார் அணி 5 போட்டி களில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றிபெற்று 27.74 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும், சென்றலைட்ஸ் அணி 4 போட்டி களில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 13.97 புள்ளி களைப் பெற்று 2ஆம் இடத்திலும், யாழ்.சென்றல் அணி 2 போட்டி களில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று 12.18 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும்,

யாழ்.பல்கலைக்கழக அணி 4 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 11.75 புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத் திலும், ஸ்ரான்லி அணி 2 போட்டி களில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 10.13 புள்ளிக ளைப் பெற்று 5ஆம் இடத்திலும், கே.சீ.சீ.சீ அணி 3 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி 8.96 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்திலும், யாழ்.ஜொனியன்ஸ் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் வெற்றிபெற்று 8.79 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்திலும், ஸ்கந்தாஸ்ரார் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப் போட்டியில் வெற்றிபெற்று 7.71 புள்ளிகளைப் பெற்று 8ஆம் இடத் திலும்,

திருநெல்வேலி கிறிக்கற் கழக அணி ஒரு போட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் தோல்வியடைந்து 3.17 புள்ளிகளைப் பெற்று 9ஆம் இடத்திலும், அரியாலை சென்றல் அணி ஒருபோட்டியில் பங்குபற்றி அப்போட்டியில் தோல்வியடைந்து 2.19 புள்ளிகளைப் பெற்று 10ஆம் இடத்திலும் உள்ளன. (க)

# ஐபிஎல் தொடக்க விழா கொல்கத்தாவில் இன்று

8ஆவது ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் தொடக்க விழா கொல் கத்தாவில் உள்ள சால்ட் லேக் மைதானத்தில் இன்று பிரமாண் டமாக நடைபெறுகிறது.

ரசிகர்களை மகிழ்விக்கக் கூடிய வகையில் பாலிவுட் நட் சத்திரங்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் தொடக்க விழா, இரண்டு மணி நேரம் நடைபெறும். தொடக்க விழா நிகழ்ச்சியை பாலிவுட் நடிகர் சயீப் அலி கான் தொகுத்து வழங்கு கிறார்.

பாலிவுட் நட்சத்திரங்கள் பர் ஹான் அக்தர், இசையமைப்பா ளர் பிரிதாம் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

விழாவில் ஹிருத்திக் ரோஷன், அனுஷ்கா சர்மா ஆகியோரின் நடனம் இடம்பெறுகிறது. நிகழ்ச் சியின் ஒரு பகுதியாக நடைபெறும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச் சியில் போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளின் தலைவர்களும் பங் கேற்கிறார்கள். விழாவில் நடப்பு சம்பியனான கொல்கத்தா அணி யின் தலைவர் கௌதம் காம்பீர் கிண்ணத்தை ஒப்படைக்கும் நிகழ்வு நடைபெறுகிறது.

மாலை 5 மணி முதல் தொட க்க விழா நடைபெறும் மைதானத் துக்குள் ரசிகர்கள் அனுமதிக்கப் படுவார்கள். தொடக்கவிழா நிகழ்ச் சிகள் சோனி மக்ஸ், சோனி சிக்ஸ் ஆகிய தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)

# தோனி ஒருவார்த்தை சொன்னால் மாடியிலிருந்து தயங்காமல் குதிப்பேன்

## –இஷாந்த் சர்மா

உலகக் கிண்ணத்தில் தேர்வு செய்யப்பட்டும் காயம் காரணமாக பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்ட போது தனக்கு அணித் தலைவர் தோனி ஆறுதல் கூறியதாக இஷாந்த சர்மா தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வேண் டும் என்று கனவு கண்ட இஷாந்த் சர்மா அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது முழங்காலில் அவருக்கு திடீரென காயம் ஏற்பட்டது.

அதனால் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளாமல் நாடு திரும்பினார். தற்போது குணமடைந்து விட்ட இஷாந்த் சர்மா ஐபிஎல் போட்டி களில் விளையாட தயாராகிவிட்டார்.

இதுகுறித்து அவர் கூறுகை யில், 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வேன் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அது நடக்க வில்லை.

2015இல் நான் தெரிவாக அதிக வாய்ப்புகள் இருந்தது. ஆனால் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக விளையாட முடியாமல் போனது. நான் மிகவும் வருத்தம் அடைந்த நேரத்தில் இந்திய அணித் தலைவர் தோனி எனக்கு ஆறுதல் கூறினார்.

தோனி 24ஆவது மாடியில் இருந்து குதிக்க சொன்னால் கூட சற்றும் தயங்காமல் குதித்து விடு வேன். யாரும் காயம் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள். ஆனால் நான் இதை தயங்காமல் தோனிக் காக செய்வேன்.

மருத்துவர்கள் ஒரு நாளைக்கு 10 ஓவருக்கு மேல் பந்து வீசக் கூடாது என்று எச்சரிக்கை செய் துள்ளனர். ஆனால் கிரிக்கெட்டின் மீது ஆர்வம் காரணமாக தினமும் அதிகமாகவே பந்து வீச்சில் ஈடு பட்டு வருகிறேன்.

தற்போது நான் குணமடைந்து




விட்டதால் ஐ.பி.எல்.போட்டிகளில் கலந்து கொண்டு விளையாட தயாராக உள்ளேன் என்று கூறி யுள்ளார். (க)

# அணிக்கு திரும்புவதை விமர்சிப்பதா? கூச்சுக்கு பீட்டர்சன் காட்டமான பதில்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி யின் முன்னணி துடுப்பாட்ட வீரர் களில் ஒருவர் கெவின் பீட்டர்சன். அவரை அணியில் ஏற்பட்ட குழப் பத்தால் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அவரை புறக்கணித்து வருகிறது.

பீட்டர்சன் இல்லாமல் இங்கி லாந்து அணியால் சிறப்பாக செயல் பட முடியவில்லை. இதனால் மீண்டும் இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்க முயற்சி செய்து வரு கிறார். அந்தவகையில், இந்தியா வில் நாளை தொடங்கும் ஐபிஎல் தொடரில் இருந்து விலகி கவுன்ட்டி போட்டியில் விளையாட இருக் கிறார்.

இந்த நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப் பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி இந்தத் தொட ரில் வெற்றி பெற்று பீட்டர்சன் டெஸ்ட் அணிக்கு திரும்ப வேண் டும் என்ற யூகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று இங்கி லாந்து அணியின் முன்னாள் தலைவர் கிரகாம் கூச் கருத்து தெரி வித்திருந்தார்.




இதற்கு கெவின் பீட்டர்சன் தன் டுவிட்டர் பக்கத்தில் காட்டமாக பதில் அளித்துள்ளார். அதில், "உங்கள் தலைமையில் கடந்த 1982ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி தென் னாபிரிக்கா சுற்றுப் பயணத்தின் போது அணியில் பிளவை ஏற்படுத் தியதற்காக 3 வருடம் தடை விதிக் கப்பட்டீர்கள். பின்னர் மீண்டும் அணிக்கு திரும்ப வந்தீர்கள். உங்களை போல் மோசமான செயலில் நான் ஈடுபட்டேன் என்று நான் நினைக்கவில்லை" என்று கூறியுள்ளார். (க)

# ஐபிஎல்லில் சிறப்பாக செயற்பட்டு இந்திய அணியில் இடம்பிடிப்பேன்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணி யில் சகலதுறை வீரர் இர்பான் பதான் இடம்பெற்றுள்ளார்.

இவர் சமீபகாலமாக இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டு வந்தநிலையில், ஐ.பி.எல். போட்டி யில் சிறப்பாக விளையாடி மீண் டும் இந்திய அணிக்கு திரும்புவதே எனது இலக்கு என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, மீண்டும் இந்திய அணிக்காக விளையாடுவதே எனது கனவு. அதேநேரத்தில் அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதை படிப்படியாக உருவாக்க வேண் டும். தற்போது நடந்து முடிந்த ரஞ்சி டிராபியில் சிறப்பாக விளையாடி னேன். அதேபோல் ஐ.பி.எல். போட்டியிலும் விளையாட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. ஐ.பி.எல். தொடருக்குப்பின் இந் தியா அதிகமான போட்டியில் விளையாட இருக்கிறது. இதில் இடம்பெற்று எனது கனவை பூர்த்தி செய்வேன்.

கடந்த 2011ஆம் ஆண்டில் மோசமான நிலையில் இருந்த போது, நான் மீண்டும் இந்திய அணியில் விளையாட முடியாது என்று கூறினார்கள். ஆனால், நான் மீண்டும் இந்திய அணியில் இடம்பிடிப்பேன் என்று அவர்க ளிடம் கூறினேன். அதன்படி இடம்பிடித்தேன். அதேபோல் இந் திய அணியில் இடம்பிடிப்பேன் என்று இப்போதும் நான் சொல்கி றேன். அதற்காக கடுமையான உழைப்பேன் என்றார். (க)

# ஐபிஎல் தலைவராக ராஜீவ் சுக்லா நியமனம்

ஐ.பி.எல். தலைவராக ராஜீவ் சுக்லா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். 'ஸ்பாட்பிக்சிங்' சூதாட்ட பிரச்சினை காரணமாக ராஜீவ் சுக்லா 2013இல் ஐ.பி.எல். தலை வர் பதவியில் இருந்து விலகினார். இதையடுத்து ஒரிசாவைச் சேர்ந்த ரஞ்சிப் பிஸ்வால் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இவரது பதவிக்காலம் முடிவ டைவதையொட்டி, புதிய தலை வரை தேர்ந்தெடுக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா முன் னாள் கப்டன் கங்குலியையும், முன்னாள் தலைவரும், ஐ.சி.சி. சேர்மனுமான என்.சீனிவாசன், பிஸ்வாலையும், கிரிக்கெட் சபை செயலாளர் அனுராக் தாக்கூர், முன்னாள் பொருளாளர் அஜய் ஷிர்கேயையும் ஆதரித்தனர். (க)

# மேதினத்தில்...

கப்பட்டுள்ளது.

கொழும்பு ஹைட் பார்க் மைதா னத்தில் மேதினக் கூட்டமும் பேர ணியும் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்க உள்ளார்.

இதன்மூலம் சுதந்திரக் கட்சி யின் அனைத்து தலைவர்களை யும் ஒரே மேடையில் இணைக்க முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

பேரணியில் ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதிகளும் பங் கேற்பார்கள் என எதிர்பார்ப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரி வித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவின் செயற்பாடு...

நாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால், இறுதியில் மைத்திரிபால சேனாநாயக்க, அனுர பண்டாரநாயக்க ஆகியோர் தலைமையிலான அணி மற்றும் லலித் அத்துலத் முதலி காமினி திஸாநாயக்க தலைமையிலான அணியினருக்கு ஏற்பட்டது போல் வெற்று மைதானத்தில் உரையாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

மைத்திரிபால சேனாநாயக்க, அனுர பண்டாரநாயக்க ஆகியோர் கட்சியை உடைத்து கொண்டு வெளியில் சென்றனர்.

அவர்களுடன் கட்சியின் மத்திய செயற்குழுவை சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் சென்ற போதிலும் இறுதியில் வெற்று மைதானத்தில் உரையாற்றும் நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது.

கட்சியை பிளவுபடுத்தி சென்றவர்கள் மீண்டும் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் திரும்பிவந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற லலித் மற்றும் காமினிக்கும் அதே நிலைமைதான் ஏற்பட்டது. இவர்கள் நுகேகொடையில் நடத்திய கூட்டத்திற்கு விமல் வீரவன்ஸவினர் மகிந்தவுக்கு ஆதரவாக நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனத்தை விட அதிகளவில் மக்கள் கலந்து கொண்டனர்.

லலித்தும் காமினியும் இப்படி நாடு முழுவதும் பாரிய கூட்டங்களை நடத்தினர். மக்கள் அந்த கூட்டங்களில் திரளாக கலந்து கொண்டனர். இறுதியில் அவர்கள் வெற்று மைதானத்தில் உரையாற்ற நேர்ந்தது எனவும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் தோற்கடிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்து கொண்டு, அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய எஸ்.பி.திஸாநாயக்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக அவதூறுகளையும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

எனினும் தேர்தலின் பின்னர், முன்னாள் ஜனாதிபதியை விமர்சித்து வரும் அவர், தற்போது ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் அமைச்சுப் பதவியைப் பெற்று கொண்டு நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தேசிய...

நாடாளுமன்ற கட்டிட தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய அவர் 19-வது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு நாளை தம்மிடம் கிடைகப்பெறும் என தெரிவித்தார்.

உத்தேச 19-வது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் பிரதமர் ரணில் வக்கிரமசிங்கவினால் கடந்த மாதம் 24-ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த சட்டமூலம் தொடர்பில் 19 மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதில் ஐந்து மனுக்கள் சட்ட மூலத்திற்கு ஆதரவாகவும், 14 மனுக்கள் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (செ-11)

## ஆட்சி மாற்றத்தினால்...

நேற்றைய தினம் காலை 9.00 மணியளவில் விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி முன்னதாக யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம ஆண்டகையினை ஆயர் இல்லத்தில் காலை பத்துமணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

பின்னர் காலை 10.30 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சரினை அவரது வாசஸ் தலத்தில் அவுஸ்திரேலிய தூதுவர் சென்று சந்தித்த போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் தொடர்பில் ஆராய்வதற்கு அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பலதரப்பட்டவர்களினையும் சந்தித்து சென்றுள்ளார்.

குறிப்பிட்ட சிலவிடயங்களை மட்டும் அவர் கதைக்கவில்லை. இங்குள்ள சூழ்நிலைகள் அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் அதிகமாக அவர் கேட்டறிந்திருந்தார்.

புதிய ஆட்சியில் ஜனநாயகம் எவ்வாறான நிலையில் உள்ளது. வடக்கில் ஏற்பட்டுள்ள புதிய மாற் றங்கள் என்ன என்றவாறெல்லாம் அவர்கேட்டறிந்து கொண்டார். இதற்கு புதிய ஆட்சியின் போது நாம் எதிர்பார்த்த விடயங்கள் ஒன்றும் பெரிதாக நடை முறைப்படுத்தப்படவில்லை என்பதனை அவருக்கு தெரியப்படுத்தினேன்.

இதற்கு இங்கு தொடர்ந்தும் நல்லிணக்க நடவடிக்கைகளினை புரிந்துணர்வு நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தங்களால் முடிந்தளவு உதவிகளை செய்யும் என தூதுவர் தெரிவித்ததாக முதலமைச்சர் தெரிவித்தார். (எ-4)

## மக்களை...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ஏற்கெனவே தமக்கு காட்டிய அரசியல் யாப்புத் திருதத பிரதியும் உச்ச நீதிமன்றுக்கு சமர்ப்பித்த யாப்புத் திருத்தப் பிரதியும் மாறுபட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி முறைக்கு பதிலாக நிறைவேற்று பிரதமர் முறையை கொண்டு வர அனுமதி இல்லை என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

1995ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சிக்கு ரணில் செய்த செயலால் 20 வருடங்கள் அக்கட்சி தோல்வியை தழுவியதாகவும் அதே திட்டத்தை நாட்டுக்கு செய்ய முடியாது என்றும் இதனை நாங்கள் எதிர்ப்பதாகவும் அமைச்சர் சம்பிக்க கூறியுள்ளார். (செ-11)


### தவறவிடப்பட்டுள்ளது

Honda வகையைச் சேர்ந்த கார் ஒன்றின் Np cab - 0617 என்னும் இலக்கமுடைய இலக்கத் தகடு கோயில் வீதிக்கும் கே.கே.எ[ஸ்] வீதிக்கும் இடையில் 04.04.2015 சனிக்கிழமையன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (012)

தொடர்புகளுக்கு :- 0778452932


## பாக்.-இலங்கை...

உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

01-பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் சர்வதேச தொடர்புகள் மற்றும் வியூக கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிலையம் ஆகியவற்றிக்கு இடையிலான ஒத்துழைப்பு கற்கைகள் தொடர்பான உடன்படிக்கை.

02- போதைப் பொருள், நரம்பு மண்டலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் போதைப் பொருளை தயாரிக்க பயன்படுத்தும் இரசாயனங்களை சட்டவிரோதமாக கடத்திச் செல்லப்படுவதற்கு எதிரான ஒத்துழைப்பு உடன்படிக்கையும் இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

03- இலங்கையின் இடர் முகாமைத்துவம் அமைச்சுக்கும் பாகிஸ்தானின் தேசிய இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கையெழுத்திடப்பட்டது.

04- விளையாட்டுத்துறை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

05- பாகிஸ்தான் கப்பற் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் இடையிலும் உடன படிக்கை ஒன்று கையெழுத்திடப் பட்டது.

06- இலங்கை அணு சக்தி மற்றும் பாகிஸ்தான் அணுசக்தி ஆணைக்குழு இடையில் அணு சக்தி துறையில் ஒத்துழைப்புகளை வழங்குவது தொடர்பிலும் உடன் படிக்கை ஒன்று கையெழுத்திடப் பட்டது.

இந்த உடன்படிக்கைகளில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு விவகார அமைச்சின் ஆலோசகர் ஆகியோர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். (செ-11)

## மகிந்தவோ...

ஒன்றில் ஈடுபட்டுள்ளார்.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகவே அவர், நேற்று இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தான் மஹா பராக்கிரமபாகு மன்னன் என்றும் தான் மீண்டும் பிறந்து, நாட்டை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காக செயற்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

பிங்கிரிய தளுபனயை வசிப்பிடமாக கொண்ட நீல் தம்மிக்க குணசிங்க என்பவரே இவ்வாறு தன்னை அடையாளப்படுத்தி கொண்டுள்ளார்.

மேலும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோ, முன்னாள் இராணுவத்தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவோ அழித்தொழிக்க முடியாது. வேலுப்பிள்ளை பிரபாகரன், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம் பெற்ற சுனாமி பேரழிவிலேயே மரணித்து விட்டதாகவும் அவர், எழுதி வைத்துள்ள சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படி தனக்கு தெரிந்த சத்தியத்தை வெளிப் படுத்துவதற்காக ஜனாதிபதியை சந்திப்பதற்கு சந்தர்ப்பமொன்றை பெற்று கொடுக்குமாறு கோரியே இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிடடுள்ளார். (செ-11)


### வேலைவாய்ப்புக்கள்

Golden group (Advertising)
எமது நிறுவனத்தில் உருவாக இருக்கும் புதிய கிளைகளுக்கான
- மேற்பார்வையாளர்
- விநியோகஸ்தர்
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்

போன்ற பதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
O/L இல்லாதவர்களுக்கும் விசேட பதவி வாய்ப்புக்கள் உள்ளன.
O/L, A/L உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.
கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. No. 8,6ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :- 0779987699 (028)

### ரலண்ட் அக்கடமி
மல்லாகம் (சந்திக்கு கிழக்குபுறம்) ஏழாலை மேற்கு (சைவ சன்மார்க்க வித்தியாசாலை)
பண விரயத்தினைத் தவிருங்கள்.
உயர்தரத்தில் இலவசமாக பின்வரும் நெறிகளை மேற்கொள்ளலாம்.
- சிங்களம்
- கணனிக் கல்வி
- English Spoken with Gammer

O/L Day class
இம்முறை 3 பிரிவு ஆரம்பம் :- 10.04.2015
முதலில் இணையும் 100 பேருக்கு. இலவசம்
(முற் பதிவுகளை மேற்கொள்ளவும்) தொடர்பு : 0772140675 (002)

எடிசன்
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், சுன்னாகம்
2014 O/L
30 9A
Students

O/L உடன்
UK, Switzerland, New Zealand, Australia, Canada & Malaysia
இலங்கையில் உயர்தரம் முடித்து பல்கலைக்கழகம் செல்லும் காலத்துக்குள்





2015 - 2016 இல் — விரும்பிய நாட்டில் - விரும்பிய துறையில் உயர்தரத்துக்குப் பதிலாக ஒரு வருடம் FOUNDATION செய்து
2016-2019 இல் — பகுதிநேர வேலைவாய்ப்புடன் பட்டதாரி ஆகி
2020 இல் — தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை [PR] பெறுங்கள்
IELTS அவசியமில்லை*
UPTO 50% Scholarships
- முன்னணி பல்கலைக்கழகங்கள் & கல்லூரிகள்
- 15 வருட விசா சேவை அனுபவமுள்ள நிபுணர்கள்
- அந்தந்த நாட்டு அரச அங்கீகாரம் பெற்ற குடிவரவு முகவர்கள்

பல்கலைக்கழக அனுமதி - விசா ஒழுங்கு - குடியுரிமை (PR)
அனைத்து ஏற்பாடுகளையும் நாமே செய்து தருகிறோம்!
FREE Assessment
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள
www.sikaram.lk
Student Visa - Spouse Visa - Super Visa - Visit Visa - Migration
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 077 36 16 798 / 021 222 00 11
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SARAVANA Texs
சரவணா புடவையகம்
வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்
இல :- 770,772, கே.கே.எஸ் வீதி (துட்டாதெருச்சந்தி) எனும் முகவரியில் இயங்கி வந்த சரவணா ரெக்ஸ் 526, 529 பருத்தித்துறை வீதி நல்லூர் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன். (C-541)
-உரிமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.